# திருக்கோயில்



நவம்பர்
2000

விலை
ரூபாய் ஐந்து



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 29.10.2000 அன்று புதிய கட்டிடங்கள் திறப்பு விழா, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் கல்வெட்டுத் திறப்புவிழா, திருக்கோயிலின் கட்டுமானப் பணிகளின் தொடக்க விழா, திருக்குட நீராட்டு மலர் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு த. பூவேந்தன், மதுரை இணை ஆணையர் திரு பொன் செல்வராஜ் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். அறங்காவலர் குழுத் தலைவர் திரு கே.சி. பழனிசாமி அவர்களும், அறங்காவலர்களும், திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு தி. ஜெயராமன் பி.ஏ.பிஎல்., அவர்களும் இவ்விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



# திருக்கோயில்


திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00





| மாலை 42 | திருவள்ளுவர் ஆண்டு 2031 | விக்ரம ஆண்டு கார்த்திகை நவம்பர் 2000 | மணி 11 |
|---|---|---|---|



சிறப்பாசிரியர்

**திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.**
ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமதி மா. கவிதா,** பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி**

## பொருளடக்கம்


**திருச்செந்தூரில் கந்தர்சஷ்டி விழாவில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. அவர்கள் ''அருளாளர்கள் கண்ட முருகன்'' எனும் பொதுத்தலைப்பில் நடைபெற்ற ஆய்வரங்கத்திற்குத் தலைமை ஏற்று ''குமரகுருபரர் கண்ட குருபரன்'' எனும் தலைப்பில் ஆற்றிய ஆய்வுரை**

குமரகுருபரர் திருவுள்ளம்
- முனைவர் த. அமிர்தலிங்கம்

''தேவராயர் கண்ட முருகன்''
- முனைவர் பேராசிரியர் ச. கணபதிராமன்

இறைவனை எங்கே காணலாம்? - கவிஞர் சொ.பெ. சொக்கலிங்கம்

பழநி மலையைச் சாரேனோ
சாமி அழகைப் பாரேனோ
- பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

பெரிய புராணத்தில் வரலாற்றுச் சிறப்பு
- கலைமாமணி கே.பி. அறிவானந்தம்

திருக்கோயில் வழிபாடே துன்பங்கள் தவிர்க்க வழி
- சிவத்திரு த. ஆறுமுகம்

வினாவும் விளக்கமும்
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்



*உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :*
உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற கந்தர் சஷ்டி விழாவில் 1.11.2000 அன்று சிறப்புற நடைபெற்ற ''அருளாளர்கள் கண்ட முருகன்'' ஆய்வரங்கில் கலந்துகொண்டு ''குமரகுருபரர் கண்ட குருபரன்'' எனும் தலைப்பில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப. அவர்கள் ஆற்றிய ஆய்வுரை.**

அனைவருக்கும் வணக்கம்

எனக்குக் கொடுத்திருக்கின்ற தலைப்பு ''குமர குருபரர் கண்ட குருபரன்'' இதையே மாற்றிச் சொல்ல வேண்டும் என்றால் ''சிவகாம சுந்தரியின் மகன் குருபரன் கண்ட, சிவகாம சுந்தரியின் மகன் குருபரன்'' என்று சொல்லலாம்.

குமரனுக்கு - முருகனுக்கு இன்னொரு பெயர் குருபரன். முருகனுடைய தாய் சிவகாமசுந்தரி. குமர குருபரருடைய தாயார் பெயரும் சிவகாம சுந்தரி என்பது இங்கு நாம் நினைத்து ஒப்பிட்டு மகிழத்தக்க ஒன்றாகும்.


முருகனுடைய தோற்றத்தை - முருகோதயத்தை - அதன் பின்னணியில் இருக்கின்ற புராண வரலாறுகளை எல்லாம் நம்ப மறுக்கின்றவர்கள் - தயக்கம் காட்டுகின்றவர்கள் கவலைப்படத் தேவையில்லை. முருகனுடைய அவதார மகத்துவத்தை - அதன் முக்கியத்துவத்தை மட்டும் நாம் அறிந்தால் அதுவே போதுமான ஒன்றாக - நன்மை பயக்கத்தக்க ஒன்றாக அமையும் என்று நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

உதாரணத்திற்கு இன்று ஒரு பவுன் விலை ரூபாய் ஒன்று என்றால், 10 பவுன் என்ன விலை என்று பெருக்கல் தேர்வு வைத்தால் அந்த மாணவன் 10 ரூபாய் என்று விடை சொல்வான். அது சரியான விடையாக அமையும். மாறாக, ஒரு பவுன் ஒரு ரூபாய்க்கு எங்கே கிடைக்கிறது என்று அந்த மாணவன் கேட்டால் அதை அறியாமை என்றோ அல்லது குதர்க்கம் என்றோ தான் கொள்ள வேண்டும். பெருக்கல் கணக்கிற்காக அப்படி ஒன்றைச் சொல்லி அதற்கான விடையை ஆசிரியர்கள் பெறுவது வழக்கம். அதைப் போன்று சொல்ல வேண்டிய செய்தியை தெரிவிக்க வேண்டிய செய்தியை மக்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே அருளாளர்கள் புராணக் கருத்துகளாகச் சொல்லிச் சென்றிருக்கின்றார்கள். அதனாலே நாம் எந்த வகையிலும் அப்புராணக் கருத்துகளைக் குற்றம் சொல்வதற்கு இல்லை.

இங்கே ''குமர குருபரர் கண்ட குருபரன்'' என்பது குமரகுருபரன் கண்ட குருபரன் ஒரு பகுதி. குருபரனிடம் இவர் என்ன கண்டார் என்பது இரண்டாம் பகுதி. கண்ட முருகன் என்றால் முருகனுடைய தோற்றத்தைப் பற்றிச் சொல்லுவதாக அமையும். முருகனிடம் என்ன கண்டார் என்றால் முருகனுடைய இயல்புகள், முருக னுடைய வீரம், தீரம், ஈரம், அவனுடைய அருட் தன்மை, அவனுடைய ஆற்றல், அவன் அடியார்களுக்கு வரம் அளிக்கின்ற வள்ளல் தன்மை ஆகியவற்றைக் கூறுவதாகத்தான் அமையும். அந்த வகையிலே எனக்குத் தெரிந்தவற்றை உங்களிடம் ஒருசில நிமிடங்கள் பகிர்ந்து கொள்ளலாம் என்று இருக்கின்றேன்.

வாய் பேசாமல் இருந்து, முருகன் அருளாலே குமரகுருபரர் பேச முனைந்த பொழுதே, ''கந்தர் கலி வெண்பா''வைப் பாடி விடுகின்றார். இப்பொழுதெல்லாம் குழந்தை பேசவில்லை என்றால் முதலில் மருத்துவரிடம் கொண்டு சென்று காட்டுவார்கள். அதற்குப் பின்னாலே மருத்துவர் தன்னால் முடியாது என்று சொல்லிவிட்டால், மருத்துவருக்கும் மருத்துவராக இருக்கின்ற ஆண்டவனிடம் கொண்டு சென்று காட்டுவார்கள். இன்று இருக்கின்ற மருத்துவ வசதிகள் அன்று இல்லாத காரணத்தாலோ என்னவோ, குழந்தைக்கு அல்லது யாருக்கும் ஏதாவது குறை இருந்தால் அன்றைக்குத் திருக்கோயிலே வந்துதான் மக்கள் முறையிடுவார்கள்.

குமரகுருபரரைப் போலவேதான், அவர் பிறந்த ஊருக்கு அண்மையில் உள்ள கிராமத்திலே பிறந்த நம்மாழ்வாரையும் ''இரட்டைத் திருப்பதிக்''குக் கொண்டு சென்று ''முன்னிலும் பின் அழகிய பெருமாள்'' என்று அந்தக் குழந்தைக்குச் சுட்டிக்காட்டிப், பின்னாலே ''ஆழ்வார் திருநகரி''யான தம்முடைய ஊருக்குக் கொண்டு வருகிறார்கள். 16 ஆண்டு



காலம் நம்மாழ்வார் மௌனமாக இருந்து, நமக்கெல்லாம் ''திராவிட வேதம்'' என்று வழங்கப்படும் திவ்விய பிரபந்தங்களை அருளிச்செய்கின்றார். அதே போன்று குமர குருபரருடைய தாயாரும் தந்தை யாரும் இங்கே திருச்செந்தூரிலே சண்முகர் சந்நிதியிலே கொண்டு வந்து குழந்தையைக் கிடத்திக் கிட்டத்தட்ட 6 மாதம் இங்கே விரதம் இருந்து அதன் பயனாகக் குழந்தை பேசியது மட்டும் அல்லாமல் அற்புதமான ''கந்தர் கலிவெண்பா'' பாடுவதையும் கேட்டு மகிழ்ந்தார்கள்.

கந்தர் கலி வெண்பாவில் முதலிலேயே சிவனே முருகன் என்பதைக் குமரகுருபரர் சுட்டிக் காட்டுகின்றார். நான்காவது பாடலிலே பரமசிவன் என்று சொல்லுகின்றார். 24 ஆவது பாடலிலே குருபரன் என்று சொல்லுகின்றார். பிறகு 77-ஆவது பாடலிலே முருகனுடைய தோற்றத்தைப் பற்றி எல்லாம் சொல்லுகின்றார். எனக்கு முன்பு பேசிய பேச்சாளர்கள் எல்லாம் முருகனுடைய தோற்றத்தைப் பற்றி விவரித்து விட்ட படியால், நானும் அதைப்பற்றிக் கூறுவது தேவையில்லை என்று எண்ணுகின்றேன்.

ஒரு கூட்டத்தில் பின்னாலே பேசுகின்றவர்களுக்கு அனுகூலமும் உண்டு; பிரதிகூலமும் உண்டு. அனுகூலம் என்னவென்றால், முன்னாலே பேசியவர்களின் கருத்தை எல்லாம் எடுத்து தொடுத்துப் பேசி விடலாம். பிரதிகூலம் என்னவென்றால் நாம் பேச நினைத்து வைத்திருப்பதை எல்லாம், முன்னாலே பேசுகிறவர்கள் பேசி விடுவார்கள். ஆகவே பின்னாலே பேசவந்த நான் சதுப்பு நிலத்தில் நிற்கின்றவனுடைய நிலைக்கு ஆளாகி உள்ளேன். ஆகவே எனக்கு முன்னால் பேசியவர்கள் தெரிவித்த கருத்துகளை எல்லாம் தவிர்த்து, புதிய கருத்துகள் ஒன்றிரண்டைத் தெரிவிக்கலாம் என்று எண்ணுகின்றேன்.

குமரகுருபரர் முருகப்பெருமான் தோன்றிய வுடனே என்னென்ன லீலைகளை எல்லாம், எப்படியெப்படி எல்லாம் செய்து பெற்றோர்களை மகிழ்வித்தார் என்பதை ''முத்து குமாரசாமி பிள்ளைத் தமிழ்'' நூலிலே கூறுகின்றார்.

முருகன் சிவன் கையிலே இருக்கின்ற உடுக்கையைப் பிடுங்கிக் கொள்கின்றார். அவருடைய வயிற்றின்மேல் ஏறுகின்றார்; மார்பின் மேல் ஏறித்

தவழ்கின்றார். அவர் கையிலுள்ள அக்கினியைக் கங்கையைக் கொண்டு அணைக்கின்றார். அவர் கையிலுள்ள மானுக்கு அருகம்புல்லைக் கொடுக்கின்றார். அவர் நெற்றிப் பிறையை எடுத்து, அவர் தாய் அணிந்திருக்கின்ற ஆபரணமாகிய பிறையிலே சேர்த்து, முழு நிலவு போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றார். பாம்பை விரட்டுகிறார். அப்பொழுது பிரமன் சிரிக்க அவனைக் குட்டுகின்றார். இப்படி எல்லாம் முருகனுடைய பால லீலைகள் அவனைப் பெற்றவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தன என்பதைச் சொல்லுகின்றார் குமரகுருபரர்.

முருகப்பெருமான் தம் தாயாகிய உமையம்மையின் கண்களைப் பொத்தச் செல்கின்றார். முடியவில்லை என்ற காரணத்தினால் தகப்பனாகிய சிவபெருமானுடைய கண்களைப் பொத்துகின்றார். அப்பொழுது பிரபஞ்சம் இருண்டு விடுகின்றது. பயந்து விடுகின்றார். முருகனைத் தாய் எடுத்து அணைத்துக் கொள்கின்றார். அப்பொழுது முருகன் தாய்க்கும், தந்தைக்கும்' முத்தம் இடுகின்றார். கங்கை தனக்கும் முத்தம் வேண்டுமென்று கேட்க முருகன் மறுத்து ஓடுகின்றார் - இப்படி முருகனை உமையம்மை பாராட்டிச் சீராட்டி வளர்க்கின்றார் என்றெல்லாம் முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் நூலிலே குமரகுருபரர் தான் கண்ட முருகனை நமக்கு அழகாக எடுத்துக் காட்டுகின்றார்.

அம்புலியோடு முருகனை ஒப்பிட்டுப் பார்க்கின்றார் குமரகுருபரர். அம்புலியை முருகனுடன் விளையாடவா என்று அழைக்கின்றார். அம்புலி தேய்வதை ஒரு நோயாகக் கூறி, நீ முருகனுக்கு இணையானவன் தானா? என்று கேட்டு, முருகனுடன் விளையாட வந்து அவன் அருளைப் பெற்றுக்கொள் என்றும் கூறுகின்றார் குமரகுருபரர்.

அதற்குப் பிறகு முருகனுடைய இறைத் தத்துவத்தையும் கூறுகின்றார் குமரகுருபரர். ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்று சொல்லுவார்கள். அவனன்றி ஓரணுவும் அசையாது என்றால் ஏதோ நாம் செய்கின்ற செயலுக்கு எல்லாம், வினைகளுக்கு எல்லாம் இறைவன்தான் காரணம் என்ற பொருளிலே பெரியோர்கள் சொல்லவில்லை என்று நான் நினைக்கின்றேன்.

நம்முடைய ஆன்மா - உயிர்; இது அறிவுடைப் பொருள். யாராவது இந்த உயிரை இயக்கினால் அது இயங்க முடியும். அந்த உயிருக்கு இந்த உடல் தேவைப்படுகின்றது. சிவபெருமான் தநு, கரண, புவன, போகம் என்ற அத்தனையும் கொடுத்து உயிரை இயக்கி அது அறிவுடைப் பொருளாக இருப்பதை வெளிப்படுத்துகின்றார். இதைத் தான் ''அவன் அன்றி ஓரணுவும் அசையாது'' என்று சொல்லுகின்றார்கள். இந்த உடலைக் கொடுத்து, அந்தகரணத்தைக் கொடுத்துப் புறக்கருவிகளைக் கொடுப்பதால்தான் இந்த உடல் அசைகின்றது. சிவபெருமான் இந்தப் பேருபகாரத்தைத் தான் உயிர்களுக்குச் செய்கின்றார். இந்தப் பேருபகாரத்தை அவர் ஏன் செய்ய வேண்டும்? எப்படி இதை உபகாரம் என்றும் சொல்ல முடியும்? எனக்கு லாபமும் வேண்டாம், நஷ்டமும் வேண்டாம். எனக்கு ஏன் இந்தப் பிறவியை இறைவன் ஏற்படுத்துகின்றார்? என்றெல்லாம் எண்ணிப் பார்த்தால், அது சரியான சிந்தனையாக இருக்க முடியாது என்றுதான் தெரிகின்றது.

குழந்தைகளைப் பெற்றோர்கள் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் குழந்தை பள்ளிக்குச் செல்ல விருப்பம் இல்லாமல் இருக்கின்றது. எப்படியாவது குழந்தை பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று பெற்றோர்கள் கண்டிக்கச் செய்வார்கள்; தண்டிக்கக் கூடச் செய்வார்கள். பின்னாலே படித்து முடித்த பிறகுதான் பெற்றோர்கள் செய்தது நியாயம்; நமது நன்மைக்காகத்தான் பெற்றோர்கள் இதைச் செய்திருக்கிறார்கள் என்பதை அந்தக் குழந்தைகள் உணரும். அதைப் போல கடைசிக்கட்டத்திலே நாம் முத்திப் பேறு அடையும் போதுதான் இறைவன் நமக்கு அளவில்லாத இன்பங்களைக் கொடுப்பதற்குத் தான், இடையிலே இந்த உடல் முதலானவற்றைக் கொடுத்து, இன்ப துன்பங்களைக் கொடுத்து நம்மை ஆளாக்குகின்றார் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

குமரகுருபரரும் அவ்வாறே தம்முடைய ''கந்தர் கலி வெண்பா'' நூலில் தொல்லையில்லாத - எல்லையில்லாத இன்பத்தைத் தருவதற்காக இந்த உடலைப் படைத்திருப்பதாகச் சொல்லுகின்றார். முருகனுடைய அழகினையும் முடி முதல் அடிவரை அவர் வருணிக்கின்றார். முடியைச் சொல்கின்றார், நெற்றியைச் சொல்கின்றார்; கண்களைச் சொல்கின்றார்; வாயைச் சொல்கின்றார்; காதைச் சொல்கின்றார்; மார்பைச் சொல்கின்றார்; கைகளைச் சொல்கின்றார்; இடுப்பைச் சொல்கின்றார்; திருவடிகளைச் சொல்கின்றார். ஒவ்வொன்றையும் உவமையோடு சொல்கின்றார். குமரகுருபரரும் மற்ற அருளாளர்கள் கண்ட முருகனைப் போன்றே ஆறுமுகங்களும், பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு கைகளும் கொண்ட முருகனாகத்தான் சித்தரிக்கின்றார்.

ஆறுமுகம் என்று சொல்லும்போது ஒரு சிலர் கேலியாகக் கூடப் பேசுவார்கள். ''இந்த ஒரு முகம் வைத்துக் கொண்டு படுக்கும் பொழுதே, நமக்குக் கழுத்தெல்லாம் சுளுக்கிக் கொள்கின்றதே! ஆறு முகத்தை வைத்துக் கொண்டு அவர் எப்படி படுப்பார் என்று கேட்கிறார்கள். அவர் படுத்தால் என்ன ஆகும்? ஒரு பேருந்து ஓட்டுகிற ஓட்டுநர் கொஞ்சநேரம் கண் அயர்ந்தாலே நாமெல்லாம் என்ன கதியாவோம்? மேலே போய் விடுவோம் என்று தெரியும். முருகன் படுத்தால் நாம் எல்லோரும் போய் விடுவோம். ஆகவே முருகன் படுக்கமாட்டார்.

''அந்தரத்தில் அகிலகோடி
தாழாது நிலை நிற்கவில்லையோ?''

என்று தாயுமானவர் சொல்லுவார். இந்த அண்ட சராசரங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளாமல் இயங்குகின்ற ஒரு ஆற்றலை அவர் பெற்று இருக்கின்ற காரணத்தினாலே அவர் உறங்குவதில்லை. நமக்கு அருள் பாலிப்பதற்காகவே இறைவன் இருக்கின்ற காரணத்தினாலே, இப்படிப்பட்ட கேள்விகளை எல்லாம் நாம் சிறிதும் பொருட்படுத்தத் தேவை இல்லை.

குமரகுருபரர் அதற்கு அடுத்தாற்போலே கூறுகின்றார். முருகப் பெருமான் காமத்தினாலே பிறந்தவர் அல்லர்; அவர் ஞானத்தினாலே பிறந்தவர். அவ்வாறு பிறந்தவர் தனித்தனி ஆறுமுகங்களுடன் ஆறு குழந்தைகளாக விளங்க, சிவபெருமான் உமையம்மைக்கு அந்த ஆறு குழந்தைகளைக் காட்ட, அம்மை ஆறு குழந்தைகளையும் வாரி அணைத்து ஒன்றாக்கி ஆறுமுகங்களோடு முருகனை ஒருவராக இந்த உலகங்களுக்கு அருளினார் என்று கூறிக் கடைசியிலே ஒரு விண்ணப்பத்தைச் சொல்லுகின்றார்.

முருகன் வேண்டிய வரத்தைத் தருகின்றவன்; கேட்டதைக் கொடுக்கின்றவன்; நினைத்ததைக் கொடுக்கின்றவன். நமது தகுதியை முற்றிலுமாகப் பார்த்துக் கொடுக்காமல், சிறிது அளவு தகுதி இருந்தாலும், பெருமளவு இன்பத்தை - வரத்தை அளிக்கவல்லவன் என்கிற காரணத்தாலே தம்முடைய விண்ணப்பத்தைக் கடைசியிலே குமரகுருபரர் சொல்லுகின்றார்.

அந்த விண்ணப்பம் என்னவென்றால் இந்தப் பேய், பூதம், பிசாசு, பில்லி, சூனியம் - இவைகளாலே தான் பாதிக்கப்படக் கூடாது என்று சொல்லுகின்றார். இந்தத் துன்பத்தை மூவகையாகச் சொல்லுவார்கள் - ஆதிதெய்வீகம், ஆதி பௌதிகம், ஆதி ஆன்மீகம் என்று.

ஆதிதெய்வீகம் என்றால் தெய்வத்தினாலே நமக்குக் கிடைக்கின்ற ஜனன, மரணம், மூப்பு, திரை, நோய் - இவை எல்லாம் தெய்வத்தினாலே நமக்குத் தரப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. அத்தகைய துன்பத்திலிருந்து விடுபட வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றார். ஆதி ஆன்மீகம் என்பது நாம் நல்வினை, தீவினை செய்து அதற்கேற்பப் பலன்களைப் பெறுவது. ஆதிபௌதிகம் என்பது இடி, மின்னல், மழை, விலங்குகள் - இவைகளினாலே நேருகின்ற துன்பம். இவற்றால் எல்லாம் வரும் துன்பங்களிலிருந்து தான் விடுபட வேண்டும் என்று விண்ணப்பம் செய்கின்றார் குமரகுருபரர்.

இப்படி அவர் விண்ணப்பித்தது எதற்காக? அவருக்கு ஐந்து வயதுதான் ஆகின்றது. அவர் ஏன் இவ்வாறெல்லாம் வேண்டுகின்றார். இன்னும் பல காலம் இருந்து, மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்திலேதான் அவர் இவ்வாறு விண்ணப்பித்திருக்க வேண்டும் என்றே கருதத் தோன்றுகின்றது. அவருடைய விண்ணப்பத்திலே தமிழ்ப் புலமை வேண்டும், ஒழுக்கம் வேண்டும், ஆசுகவி ஆக வேண்டும், நாற்கவி ஆக வேண்டும், தசாவதானியாக வேண்டும் - இப்படி எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைக்கின்றார். ஏனென்றால் முருகன் வாரிவழங்கக் கூடியவன் என்பதனால்தான் இப்படி கோரிக்கைகளை வைக்கின்றார்.

முக்கியமாக குமரகுருபரர், பழைய அடியார்களுடைய தொடர்பு வேண்டும் என்கின்றார். இங்கே **பழைய அடியார்கள்** என்பதைக் கோடிட்டுக் கொள்ள வேண்டும். திடீரென்று தோன்றுகின்ற சாமியார்களுடைய தொடர்பு வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. குறிமட்டும் சொல்லுகின்ற சாமியார்களை அவர் சொல்லவில்லை. அருள்வாக்கு சொல்கின்ற சாமியாருடைய தொடர்பு வேணடும் என்று அவர் சொல்லவில்லை. பழைய அடியவர் என்று சொல்லுகிறார். ஞான நூல்களைப் பயின்று, ஞானம் பெற்று விளங்கும் அடியார்களுடைய தொடர்பு வேண்டும் என்று சொல்லுகின்றார்.

குமரகுருபரர் ஜீவன் முத்தராக இருக்கின்றார்; சாம சித்தராக இருக்கின்றார். அதனாலேதான் அவர் ஐந்து வயதிலே ''கந்தர் கலிவெண்பா''வைப் பாட முடிந்தது. ஜீவன் முத்தர் என்பது இந்த உடலுடனே முத்தி அடைவது; விதேக முத்தி உடலை விட்டு முத்தி அடைவது. அப்படிப்பட்ட ஜீவன் முத்தர்களாக விளங்குகின்ற பழைய அடியார்களுடைய தொடர்பு வேண்டும் என்று கூறுகின்றார் குமரகுருபரர். ஜீவன் முத்தர்களுடைய தொடர்பு இல்லாவிட்டால் வாசனா

மலம் தாக்கும் என்கிற காரணத்தினாலே அவர்களுடைய தொடர்பு வேண்டும் என்று கூறுகின்றார்.

வாசனாமலம் என்பது என்ன? பெருங்காயம் இல்லாவிட்டாலும் பெருங்காயம் வைத்திருந்த டப்பாவில் அந்த வாசம் அடிக்கின்றது. வெள்ளைப் பூண்டுக் குழம்பு வைத்திருந்த பாத்திரத்தில், வெள்ளைப் பூண்டு குழம்பு இல்லாவிட்டாலும் அந்த வாசனை அடிக்கிறது. இப்படி வாசனாமலம் தாக்குகின்ற காரணத்தினாலே மூவாசை வெறுத்து இருந்தாலும் கூட, முத்தி அடைகின்ற வரையிலும் வாசனா மலம் தாக்குகின்ற காரணத்தினாலே பழைய அடியார்களுடைய சகவாசம் வேண்டும் என்கின்றார் குமர குருபரர்.

வாசனா மலத்தைப் பற்றி குருஞான சம்பந்தர் அழகாக ஒரு பாடலிலே கூறுகின்றார்.

''ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்திஎல்லாம் பெற்றும் -
குருவருளால்
வைத்தபடி இருக்க மாட்டாத மாந்தருக்கு
சித்தம் சலனமாம் தினம்''

ஒருகோடி ஆகமங்கள் கற்றவர்கள், பெருகிய தவம் செய்து சித்துக்கள் எல்லாம் கைவரப் பெற்றவர்கள் அப்படிப்பட்ட மாந்தர்களுக்கும் சித்தம் சலனமாகும் என்கின்றார்.

இந்தச் சலனம் - சபலம் ஏற்பட்டால் விசுவாமித்திரருக்கு மேனகையினாலே ஏற்பட்டது போன்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே அப்படி ஏற்படாமல் இருக்க - சிவசிந்தனையுடனே இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலே - சிவன் அடியார்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தினாலே குமரகுருபரர் பழைய அடியார்களுடைய தொடர்பு வேண்டும் என்று சொல்லுகின்றார்.

இந்த ஜீவன் முத்தர் நிலையில் இருப்பவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்களுடைய சிந்தனை, செயல்கள் எப்படி இருக்கும் என்றால் அதனைப் பாரதியார் ''நந்தலாலா'' பாடலிலே குறிப்பிடுகின்றார்.

''காக்கைச் சிறகினிலே நந்தலாலா! - நின்றன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா!
பார்க்கும் மரங்கள் எல்லாம் நந்தலாலா - நின்றன்
பச்சைநிறம் தோன்றுதையே நந்தலாலா!
கேட்கும் ஒலியில் எல்லாம் நந்தலாலா - நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா!
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா! நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா''

என்று பாரதியார் பாடியிருக்கின்றார். சியாமள வண்ணனாக இருக்கின்ற காரணத்தினாலே காக்கைச் சிறகு கூட கண்ணனாக அவருக்குத் தோன்றுகின்றது. பச்சை மாமலையனாக இருக்கின்ற காரணத்தினாலே மரங்கள் எல்லாம் அவருக்குக் கண்ணனாகத் தெரிகின்றது. கேட்கும் ஒலியெல்லாம் அவருக்கு அஷ்டாச்சரமாகத் தெரிகின்றது. தீக்குள் விரலை வைத்தால் இறைவனைத் தீண்டும் இன்பம் உண்டாவதாக உணர்கின்றார் பாரதியார்.

சூட்டிற்கு என்றைக்கும் ஒரு சுவை உண்டு. சூடான பால் என்கின்றோம்; சூடான காபி என்கின்றோம். சூடான தோசை என்கிறோம். சூடான அல்வா என்று கூட சொல்லுகிறார்கள். ஜோதிப் பிழம்பாக இருக்கின்றவன் இறைவன். அந்தத் தன்மையுள்ள சூட்டிலே கையை வைத்தால் 'நின்னைத் தீண்டும் இன்பம் தெரியுதடா நந்தலாலா'' என்று சொல்லுகின்றார் பாரதியார். அப்படிப்பட்ட எண்ணத்திலே திளைப்பவர்கள் தான் அருளாளர்கள். அதனால்தான் அப்படிப்பட்ட அருளாளர்களுடைய தொடர்பு தமக்கு வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றார் குமரகுருபரர்.

சிவனும் முருகனும் ஒன்றுதான் என்றாலும் சிவன் என்பது சிவலிங்கம் அது அருவுருவம் எனலாம். ஆனால் முருகன் நம் மனதில் நிற்கின்ற உருவத்தோடு இருக்கின்றான். இந்த உருவம் ஏன் தேவைப்படுகின்றது?

இதனை

''அகளமாய் யாரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்தது என்று உந்திபற
தானாகத் தந்தது என்று உந்திபற'

என்று திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் திருவுந்தியாரிலே சொல்லுகின்றார்.

''உந்திபற'' என்பது பெண்கள் விளையாடுகின்ற ஒருவகை விளையாட்டு. காலை ஊன்றி, இருகையை அசைத்து, ஒரு பெண் ஒன்றைச் சொல்ல அதை முடித்து வைப்பதாக இன்னொரு பெண் சொல்லுவது.

கண்ணுக்குத் தெரியாமல் நிர்க்குண பிரம்மமாக இருக்கின்ற இறைவன், சகுனபிரம்மமாக வருவது எதற்காக என்று முதல் பெண் வினவுகின்றாள்.

''தானாகத் தந்தது என்று உந்திபற'' - நாமெல்லாம் இறையருளைப் பெற்று ஐக்கியம் ஆவதற்காகவே; நிர்க்குண பிரம்மமான இறைவன், சகுன பிரம்மமாக' வருகின்றான் என்று மற்றொரு பெண் விடை சொல்லுகின்றாள். அப்படித்தான் முருகன் சகுனபிரம்மமாக வந்து குமரகுருபரருக்குக் காட்சி அளித்தான்; பல அருளாளர்களுக்கும் அவ்வாறே காட்சி அளித்தான்.

ஆரம்ப கட்டத்திலே இருக்கின்ற அடியார்களுக்குத்தான் இப்படிப்பட்ட உருவங்கள் தேவை; மற்றவர்களுக்குத் தேவையில்லை என்று சொல்வது சரியா என்றால் சரி என்றும் சொல்லலாம்; அதைத் தவறு என்றால் தவறு என்றும் சொல்லலாம். ஞானிகளுக்கு இந்த உருவவழிபாடு அவசியமா? இந்த உருவ வழிபாடு தேவையில்லை தானே என்றால், இந்த இரண்டையுமே அவர்கள் கடைப்பிடித்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். அதனால் தான் அபிராமிபட்டர்

"மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து
சென்னி குனிதரும் சேவடிக் கோமளமே''

என்று சொல்லுகின்றார். மனிதர்கள் மட்டும் அல்லர்; தேவர்கள் மட்டும் அல்லர்; மாயா முனிவர்கள் - கண்ணுக்குத் தெரியாத ஜீவசமாதி அடைந்த முனிவர்கள் எல்லாம் வந்து இறைவனை வழிபடுகிறார்கள் என்று அபிராமி பட்டர் கூறுகின்றார்.

அப்படித்தான் முருகனும் நமக்கு ஆதாரமாக இருந்து இறை சிந்தனையைத் தூண்டுவதற்கு - இறை சிந்தனையை வளர்ப்பதற்கு - நம்முடைய ஆன்மீக வளர்ச்சிக்காக அருள் தரும் ஆறுமுகங்களுடனும், பன்னிரு கரங்களுடனும், எழுந்தருளி இருக்கின்றான். இங்கு முருகனுடைய வீரத்தைப் பற்றிச் சொல்லுகின்றார். அவர் தாருகாசுரனை வதைத்தது, சிங்கமுகாசுரனை வதைத்தது, பானு கோபனை வதைத்தது - கடைசியில் சூரபதுமனை வதைத்ததை எல்லாம் குமரகுருபரர் சொல்லுகின்றார்.

முருகன் சுரமகளை மணந்தது, குறமகளை மணந்தது எல்லாமும் அவர் கூறுகின்றார். முருகனுக்கு எதற்குப் பெண்டாட்டி? அவருக்கு அதென்ன ஒரு மனைவி போதாதா? எதற்கு இரண்டு மனைவி? முருகனுக்கு நாம் எல்லோருமே - உயிர்கள் எல்லாமே மனைவி என்றுதான் சொல்லவேண்டும். முருகன் புருசோத்தமன். நம் எல்லோருக்கும் அவன் தான் புருசன். முருகனுக்கு இரு மனைவிகள் என்பது ஒரு சொல்லுக்காகச் சொல்லப்பட்டது. இறைவனும், இறைவியும் இந்த உடலாலே இன்பம் அனுபவிக்கிறவர்களா என்றால் இல்லை.

அருளாளர்களும் கூட உடல் இன்பத்திற்காக திருமணம் செய்து கொள்வதில்லை. திருஞான சம்பந்தருக்கு ஆச்சாள் புரத்திலே திருமணம் நடக்கின்றது. அவருடைய மனைவி பெயர் ''ஸ்தோத்ர பூரணாம்பிகா''. காலையிலே திருமணம் நடக்கின்றது. அன்றே அவர் இறைவனுடன் ஐக்கியமாகி விடுகின்றார். அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது சாதாரண மனிதர்களைப் போன்று இந்த உலகில் இன்பத்தை அனுபவிப்பதற்காக அல்ல.

இப்படி வள்ளி - தெய்வானையரை மணம் புரிந்து அருள் பாலிக்கும் முருகனைக் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவிலும் சரி, முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழிலும் சரி, மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழிலும் சரி நம் கண்முன்னாலே கொண்டுவந்து காட்டுகின்றார். மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் உமையம்மை முருகனுக்குத் தாயாக இருந்து எப்படி வளர்க்கிறார் என்பதை எல்லாம் கூறுகின்றார்.

தாய்மார்களுக்குத் தெரியும் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்று. குழந்தையைக் குளிப்பாட்டும் போது, குழந்தையின் தலையைக் காலிலே வைத்துக் குளிப்பாட்டுவார்கள். குழந்தைக்குப் பாலூட்டும்போது மடியில் வைத்துப் பாலூட்டுவார்கள். பாலைக் குடிக்கக் குழந்தை மறுத்தால் அதன் வாயை நெரித்துப் பாலை ஊட்டுவார்கள். இவற்றை எல்லாம் குமரகுருபரர் அழகாகச் சொல்லுகின்றார். இப்படி முருகனை நமக்கு மறக்காத வண்ணம் ஒரு சித்திரமாக வடித்துக் காட்டியுள்ளார்.

இப்படி குமரகுருபரர் கண்ட குருபரனை என்னால் முடிந்த அளவிற்கு உங்களுக்கு எடுத்துக் காட்டி இருக்கின்றேன். இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி ''குமரக் கடவுளின் உள்ளத்திலே குடியிருக்க நான் வரவேண்டும்'' என்று உறுதியாக விரதம் மேற்கொண்டு, அவனையே சிந்தித்திருந்தால் எல்லையிலாத - தொல்லையிலாத இன்பத்தை முருகன் தருவான் என்று கூறி, இதுகாறும் என் பேச்சிற்கு மதிப்பளித்து அமைதியாகக் கேட்ட உங்களுக்கும், இந்தத் திருக்கோயில் நிர்வாகத்தினருக்கும், உபயமாக இவ்வாய்வரங்கை ஏற்பாடு செய்து, பெருமைப் படுத்தியுள்ள அன்பர் காத்தமுத்து அவர்களுக்கும் நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி வணக்கம்.

★ ★ ★

# குமரகுருபரர் திருவுள்ளம்

- டாக்டர் த. அமிர்தலிங்கம்

கவி இராஜசிங்கம் எனவும், தவராஜசிங்கம் எனவும் போற்றப்படும் நம் குமரகுருபர சுவாமிகள் திக்கெலாம் போற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலே தோன்றியவர் ஆவர். இவர் பிறந்த திருவிடத்தின் பெருமையை மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் தாம் பாடிய குமரகுருபரர் சரித்திரம் என்னும் நூலில்

''செந்தமிழும் சந்தனமும் திசையெல்லாம் பரிமளக்க
மந்தவளி உமிழ் வளர்குடுமி நின்றிழிந்து
கொந்தவிழ் மலர்வீசிக் குளிர்கெழு
முத்தெடுத்திறைத்து
முந்தவெழு புனற்பொருநை முழுவளத்தது
அந்நாடு''

என்று பாடியுள்ளார்.

இத்தகு பெருமை பொருந்திய நாட்டில் தாமிரவருணி நதிக்கரையில் வடபால் இருக்கும் கைலாசபுரம் எனும் ஊரில் சண்முக சிகாமணி கவிராயர், சிவகாமி சுந்தரி அம்மையார் எனும் தம்பதிகள் இறைவன்பால் மாறா அன்பும் நற்குண நல்லொழுக்கமும் நிறைந்தவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் திருச்செந்தூர் முருகப்பெருமானை வணங்கி சஷ்டி விரதம் இருந்து குழந்தை வரம் வேண்டினார்கள்.

திருச்செந்தூர் ஆலயத்தில் முருகனின் பிரசாதமாகிய திருநீற்றைக் கையில் கொடுக்காமல் பன்னீர் இலையில் வைத்தே கொடுப்பார்கள். இலையை உடைய வேலைத் திருக்கரத்தில் கொண்டவன் முருகப்பெருமான். அவன் ஆலயத்திற்கு வந்து வணங்குவார்களுக்குத் துன்பங்கள் இல்லை, பகை இல்லை, நோய் இல்லை, வறுமை இல்லை, பஞ்சம் இல்லை, நரகம் இல்லை, பிறப்பும் இல்லை, எக்குறையும் இல்லை என்று சொல்வதைப் போல பன்னீர் இலையில் வைத்துப் பிரசாதம் கொடுப்பார்கள் இத்திருத்தலத்தில் என்பதை மீனாட்சி சுந்தரனார் நயம்பட

''இலை அயில் குமரவேள் முன்
வணங்குவார்க் கென்றும் துன்பம்
இலை, அடுபகைசற் றேனும்
இலை படுபிணி நிரப்பும்
இலை, அளற் றுழன்று வீழ்தல்
இலை, பவ பவத்துச் சார்பும்
இலை, என இலைவி பூதி
எடுத்தெடுத் துதவல் கண்டார்''


என்று பாடியிருக்கும் பாடல் இங்கே குறிப்பிடத்தக்கது.

இத்தகைய திருச்செந்தூர் முருகன் திருவருளால்தான் நம் குமரகுருபர சுவாமிகள் கி.பி. 1625-ஆம் ஆண்டு ஆனித் திங்கள் திருவாதிரை நன்னாளில் சண்முகக் கவிராயர் சிவகாமி சுந்தரியார் தம்பதிகளுக்குப் புதல்வராக வந்து இப்பூவுலகில் தோன்றினார்கள். குமரகுருபரரை ஈன்ற பெற்றோர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எனினும் அம்மகிழ்ச்சி நீடித்து நிற்கவில்லை. காரணம் ஐந்தாண்டுகள் ஆகியும்கூட நம் குமரகுருபரர் வாய் திறந்து ஓர் வார்த்தையும் பேசவில்லை. 'குழந்தை ஊமையா?'' என்று கண்டவர்கள் எல்லாம் வினவப் பெற்றோர்களும் மூங்கைப் பிள்ளையைத் தமக்கருளிய முருகப் பெருமானை நொந்து கொண்டார்கள்.

இறைவன் திருநாமம் அல்லாத ஒன்றையும் பேசக்கூடாது; எண்ணக்கூடாது என்று குமரகுருபரர் பூவுலகில் தோன்றுமுன் இறைவனிடம் வேண்டியிருப்பார். இறைவரும் சுந்தரரைப் பூமிக்கு அனுப்பும் போது யாம் தடுத்தாட்கொள்வோம் என்று எவ்வாறு முன் கயிலையின் கண் அருள்புரிந்தாரோ அவ்வாறே குமர குருபரரிடமும் ''நீவாய் திறந்தால் எம்புகழைப் பாடுவாய். ஐந்து வயது வரை பேசாதிருந்தே எம்மைச் சிந்தித்திருப்பாய்'' என இவருக்கு வரம் அளித்து அனுப்பியிருப்பார் போலும். ஆதலால் தான் குமரகுருபரரும் ஐந்து வயது வரையிலும் பேச்சொன்றும் பேசாமல் இறையருளைச் சிந்தித்தவராய் வாய்பேசாது ஊமையாய் இருந்துள்ளார். ஆனால் இவருடைய தெய்வத் தன்மையை அறியாத இவர் தம் பெற்றோரும் இவரை ஊமையே என மயங்கி மனக்கவலை கொண்டு நித்தமும் கலங்கினர். இவர் தம் பெற்றோரின் கலக்கத்தைக் கூற வந்த மீனாட்சி சுந்தரரும் கலை தேர்ந்தார் யாவரையும் தம் கவிநயத்தால் மூங்கையாக்க வல்ல குமர குருபரரை மூங்கையோ என அவர்தம் பெற்றோர் ஐயுற்றனர் என்பதை நயம்பட

''பூங்கையால் எடுத்தணைத்துப் புல்லினர்
உச்சியும் மோந்து
நாம் கையா வினையாற்றி நன்றிது பெற்றனம்
என்று
தீங்கை ஆயாது கலை தேர்ந்தார்கள் யாவரையும்
மூங்கையாக்கிடுவாரை மூங்கையர் எனத்
தெளிந்தார்''

என்று பாடியிருப்பதைக் காண்கிறோம்.



குமரகுருபரரைப் பிள்ளையாகக் கொடுத்த செந்தில் ஆண்டவரிடமே முறையிடுவோம், குறை இரப்போம் என நினைந்து பெற்றோர்கள் குமரகுருபரரை உடன் அழைத்து வந்து சண்முகநாதர் கோயில் கொண்டிருக்கும் சண்முக விலாசத்தில் பல நாட்கள் பாலகனை உடனிருத்தி விரதம் இருந்தார்கள். குமரகுருபரருக்கு ஐந்து வயது முடிந்தது; ஆறாவது வயது தொடங்கும் அந்நாளில் நிகழ்ந்தது ஓர் அற்புதம். குமரகுருபரர் சண்முக நாதர் திருவருளால் இலை விபூதியை வாங்கி உடம்பில் பூசிக்கொண்டார். சண்முக நாதரை ஆறுமுறை விழுந்து வணங்கி, சந்நிதானத்திலேயே உட்கார்ந்து தம் தொண்டையைக் கனைத்து

"பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறறிய
பாமேவு தெய்வப் பழமறையும்"

என்று ஆரம்பித்து ''அடியேற்கு முன்னின்று அருள்'' என்று கண்ணில் நீர்வரக் கந்தர்கலி வெண்பாவினைப் பாடி முடித்தார். குமரகுருபரருடைய முதல் பேச்சே கந்தர் கலிவெண்பாதான். செந்தில் ஆண்டவர் திருவருளால் நிகழ்ந்தது இந்த அற்புதம். அது முதற்கொண்டு உலகமெலாம் வியக்கும் வண்ணம் குமரகுருபரர் அருமையாய் பேசவும் இனிமையாகப் பாடவும் செய்தார். ஐந்து வயதே நிறைந்த குமரகுருபரர் பாடிய கந்தர் கலிவெண்பாவைக் காசினியே கண்டு வியக்க, குமரகுருபரரைத் தமக்குத் தெய்வக் குழந்தையாக வழங்கிய செந்திலாண்டவரை நினைந்து நினைந்து உருகி உருகி, நெஞ்சு நெக்குருகி வணங்கிப் போற்றலானார் அவர் தம் பெற்றோர்.

திருஞானசம்பந்தரைப் போலவே தம் சிறு வயதிலேயே குமரகுருபரரும் தலயாத்திரையை மேற்கொண்டார். மதுரை, திருவாரூர், தருமபுரம், வைத்தீஸ்வரன் கோயில், சிதம்பரம், காசி எனப் பற்பல புண்ணியத் தலங்களுக்கும் சென்று ஆங்காங்கே உள்ள தெய்வங்களைப் பல பிரபந்தங்களால் பாடிப் புகழ்ந்துள்ள குமரகுருபரர் செய்தனவாக அறியப்படும் 16 பிரபந்தங்கள் வருமாறு:

1. கந்தர் கலிவெண்பா
2. மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்
3. மதுரை கலம்பகம்
4. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை
5. மீனாட்சியம்மை குறம்
6. திருவாரூர் நான்மணிமாலை
7. புள்ளிருக்கு வேளூர் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ்
8. சிதம்பர மும்மணிக்கோவை
9. சிதம்பரச் செய்யுட் கோவை
10. சிவகாமி இரட்டை மணிமாலை
11. நீதிநெறிவிளக்கம்
12. பண்டார மும்மணிக்கோவை
13. காசிக்கலம்பகம்
14. சகலகலாவல்லிமாலை
15. காசித்துண்டி விநாயகர் பதிகம்
16. கைலைக்கலம்பகம்.

இவற்றுள் மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமி இரட்டை மணிமாலை ஆகிய மூன்று நூல்களும் குமரகுருபரர் அருளியவை அல்ல என்ற ஓர் கருத்தும் உள்ளது. மற்ற 13 நூல்களில் கைலைக் கலம்பகத்தில் ஓரிரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. காசித்துண்டி விநாயகர் பதிகம் கிடைக்கவில்லை. மற்றைய 11 நூல்களே இன்று நாம் கற்கவும், குமரகுருபரரின் சிறந்த திருவுள்ளத்தை அறியவும் நமக்கு முழுமையும் கிடைத்துப் பயன்பட்டு வருகின்றன.

குமரகுருபரரின் உள்ளம் தமிழ் உள்ளம். சைவஉள்ளம். எந்நேரமும் ஈசனையே நினைத்து இன்புற்றிருந்த தெய்வ உள்ளம். அத்தகைய குமரகுருபரரின் சிறந்த திருவுள்ளத்தைக் காட்டும் வகையில் அமைந்துள்ள சிதம்பர மும்மணிக் கோவையிலுள்ள ஒரே ஒரு பாடல் பகுதியை மட்டுமே ஈண்டுயான் எடுத்துக்காட்ட விழைகிறேன். தில்லை நடராஜப் பெருமானிடம் குமரகுருபரர் வேண்டும் வரம் ஒன்று வியக்கத்தக்கதாக உள்ளது. மற்ற புலவர்களிடமிருந்து இத்தெய்வப் புலவரை வேறுபடுத்திக் காட்டும் அப்பாடல் பகுதியை இதோ படித்து மகிழுங்கள்:-

''மல்லலம் பொழில் சூழ் தில்லை வாண
வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும் அதுவே
பெருங்குளிர்க்கு உடைந்த காலைக் கருந்துணி
பலதொகுத் திசைத்த ஒருதுணி அல்லது
பிறிதொன்று கிடையா தாக; வறுமனைக்
கடைப்புறத் திண்ணை அல்லது கிடக்கைக்கு
இடம்பிறிது இல்லை யாக; கடும்பசிக்கு
உப்பின்று அட்ட புற்கை ஊன் அல்லது
மற்றோர் உண்டி வாய்விட்டு அரற்றினும்
ஈகுநர் இல்லை யாக; நாள்நாளும்
ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர்குழாத் தொடும் வைக; இத்திறம்
உடல்நீங் களவும் உதவிக் கடவுள்நின்
பெரும்பதம் அன்றியான் பிறிதொன்று
இரந்தனன் வேண்டினும் ஈந்திடா ததுவே''.

பட்டாடை வேண்டும், பொன்நகைகள் வேண்டும், மாடிமனைகள் வேண்டும், பால்பழம் வேண்டும் என்பதாகத்தான் ஒவ்வொருவரும் இறைவரை நித்தமும் நித்தமும் வேண்டிக்கொள்வதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் தெய்வக் கவிஞரான நம் குமர குருபர சுவாமிகளோ பெருங்குளிராக இருந்தாலும் கந்தல் ஆடை அல்லாத பிற ஆடை தமக்கு வேண்டாம் எனவும், எளிய வீட்டின் ஒட்டுத்திண்ணை அல்லாத பிறிதொரு இடம் தமக்குக் கொடுக்க வேண்டாம் எனவும், கடும் பசியாக இருந்தாலும் உப்பும் இல்லாத கஞ்சி மட்டுமே தனக்கு வேண்டும் எனவும், மெய்யடியார்களோடு தான் எப்போதும் கூடி மகிழ்ந்திருக்க வேண்டும் எனவும், உடல் உள்ளவரை இந்த வரமே கொடுத்துத்தான் மாற்றி வேண்டினாலும், அழுது கெஞ்சினாலும்கூட இவையல்லாத பிறவற்றைத் தனக்கு அளிக்காத அதையே வரமாக நம் குமர குருபரர் வேண்டியுள்ளார் எனில் இவர் தம் வீரத்தை என்ன வென்பது?

சத்திமுற்றப்புலவர், தம் ஆடையில்லா வருத்தத்தைப் பாடிய பாடல் ஒன்று எனக்கு இப்பொழுது நினைவிற்கு வருகிறது. பாண்டிய மன்னனிடம் பரிசிலை வேண்டிச் சென்ற புலவர், குளிரில் நடுங்கி வாடிக்கொண்டிருக்கும் தனக்கு நல்ல ஆடை ஒன்றும் இல்லாத வருத்தத்தைத் தன் மனைவியிடம் போய் கூறுமாறு கூறி நாரையை நோக்கிப் பாடுவதாக அமைந்த அப்பாடல் வருமாறு:-

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயும் உன் மனைவியும் தென்திசை குமரியாடி
வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்
எம்மூர் சத்திமுத்த வாவியுள் தங்கி
நனைசுவர் கூரை கனைகுரல்பல்லி
பாடுபார்த்திருக்கும் எம்மனைவியை நோக்கி
எங்கோன் மாறன் வழுதிக் கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
கால்அது கொண்டு மேலது தழீஇ
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே''

எனும் இப்பாடல் சத்திமுத்தக் கவிஞரின் ஆடையும் இல்லா வறுமையை நமக்கு உணர்த்தி நம்மை 'அச்சச்சோ' என இரக்கப்பட வைக்கிறது. ஆனால் குமர குருபரரின் ''பெருங்குளிர்க்கு உடைந்தகாலை கருந்துணி பலவுடன் இசைத்த ஒருதுணி அல்லது பிறதொன்று கிடையாது ஆக'' என்ற பாடற்பகுதி ''ஆஹா ஆஹா இதுவல்லவா வீரம்'' என்று நம்மை வியக்கச் செய்வதோடு நம்மை அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கவும் தூண்டுகிறது அல்லவா.

இதேபோல் வறுமையால் தெய்வத் தமிழைச் சனியான தமிழ் என்று வசை பாடியிருக்குமு புலவர் ஒருவரையும் நாம் பார்க்கிறோம். தமிழைப் படித்ததே தம் வறுமைக்குக் காரணம் என்று கருதும் பொற்களந்தைப் படிக்காசுத்தம்பிரான் என்ற அப்புலவர்

''அட கெடுவாய் பலதொழிலும் இருக்க
கல்வி அதிகம் என்றே கற்றுவிட்டோம்
அறிவில்லாமல்
திடமுள மோகனமாட கழைக்கூத்தாட
செப்பிடுவித்தைகளாட தெரிந்தோமில்லை
தடமுலை வேசையராகப் பிறந்தோம் இல்லை
சனியான தமிழை விட்டுத் தையலர்தம்
இடமிருந்து தூது சென்று பிழைத்தோமில்லை
என்ன சென்மம் எடுத்துலகில் இரக்கின்றோமே''

என்று பாடி நொந்து கொண்டிருக்கிறார்.

ஆனால் வறுமையை வேண்டிப் பாடிய பெருமைமிகு புலவரான குமரகுருபர சுவாமிகளோ எது வறுமை? எது செல்வம்? என்பதையும்

''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாஎனப் படுமே''

என்று தெளிவுறுத்தியிருப்பதோடு ஆயிரம் ஆயிரம் அடைகளால் தெய்வத் தமிழைப் பெருமைப்படுத்தியும் பாடியிருக்கிறார்.

அருந்தமிழ், இசை முத்தமிழ், கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம், கொத்து முத்தமிழ், கொழித்தெடுத்துத் தெள்ளித் தெளிக்கும் தமிழ், கொழி தமிழ், கொழுத்த தமிழ், சங்கத்தமிழ், செழுந்தமிழ்ச் செல்வம், செழுந் தமிழ் தெள்ளமுது, சொற் சுவை பழுத்த தொகைத் தமிழ், தண்டமிழ், தனிசுவை அமுதெழு மதுரமது ஒழுகும் பசுந்தமிழ், தலைச்சங்கம் பொங்கும் பண் முத்தமிழ், தீஞ்சுவைக்கனியும் தண்டேனறையும் வடித்தெடுத்த சாரங்கனிந்தூற்றிருந்த பசுந்தமிழ், தெள்ளுதமிழ், தெளிதமிழ், தென்னந்தமிழ், தேக்கமிழ்

மதுர மொழுகிய தமிழ், பண்ணுலாம் வடிதமிழ், புத் தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ், பைந்தமிழ், மது ரித்த வட்டெழு முத்தமிழ், முதுசொற்புலவர் தெளித்த பசுந்தமிழ், முதுதமிழ் உததி, மும்மைத் தமிழ், வண் தமிழ், வண்டமிழ்க் கடல், விரைதேன் பில்குந் தேத் தமிழ் என்பன தமிழின் பெருமையைப் போற்றும் தெய்வத்தமிழ்க் கவிஞரின் வாக்குகள் ஆகும். தமி ழின் சுவையை உண்டு மகிழவே மதுரையின் கண் உமாதேவி தடாதகை பிராட்டியாகவும், சிவபெருமான் சௌந்தரமாற பாண்டியனாகவும், முருகர் உக்கிர வழுதி பாண்டியனாகவும் வந்து தோன்றினர் என் பதை மதுரைக் கலம்பகத்தில் குமரகுருபரர்

''தமரநீர்ப்புவனம் முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவி என் றொருபேர்
தரிக்க வந்ததுவும் தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்?''

என்று பாடியிருப்பது கொண்டும், தமிழ்க் கடவுள் முருகர் இவருக்குப் பேசவும் பாடவும் மட்டும் வரம் அளிக்கவில்லை. தமிழையும் தம்வேல் கொண்டு இவர் நாவில் எழுதிவிட்டார் என்று நம்மை சிந்தித்து மகிழ வைக்கிறது.

இத்தகைய தெய்வப் புலவராகிய குமரகுருபரர் இரந்து வறுமையை வேண்டினாலும் இவரைத் தெய் வங்கள் வறுமையில் வாட்டிப் பார்த்திருந்தனவா எனில் பார்க்கவில்லை என்பதையே இவர் தம் வர லாறு வாயிலாக நாம் அறிகிறோம். முருகனைப் பாடும் மெய் அடியார்கள் ''மிடியாம் படியில் விதனப் படார்'' என்பது அருணகிரிநாதர் அருள்வாக்காகும். கந்தர் கலிவெண்பா, முத்துக் குமாரசுவாமிப் பிள்ளைத் தமிழ் நூல்களால் முருகரையும், மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழால் மீனாட்சியையும், சகலகலாவல்லி மாலையால் சரசுவதியையும், மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, திருவாரூர் நான்மணி மாலை நூல்களால் சிவபெருமானையும், பண்டார மும்மணிக்கோவையால் தம் குருநாதரான தருமபுரம் ஆதீனம் நான்காம் பட்டத்துச் சுவாமிகள் மாசிலா மணி தேசிகரையும் போற்றிப் பாடியுள்ளார் நம் குமரகுருபர சுவாமிகள். மேலும் தம் பிள்ளைத் தமிழ் நூல்களில் விநாயகர், திருமால், பிரமன், தேவேந்திரன், திருமகள், துர்க்கை, சத்தமாதர்கள், முப்பத்து மூவரை யும் கூட இவர் பாட மறக்கவில்லை. மேலும் எத்தனை வகைப் பாக்கள் உண்டோ அத்தனை வகைப் பாக் களாலும் இவர் பாடி இறைவனைப் போற்றியதே சிதம்பரச் செய்யுட் கோவை எனும் நூல். இவ்வாறு தம் உள்ளமெனும் திருக்கோயிலில் நாளும் நாளும் தமிழ் மதுரப் பாக்களைப் புனைந்து கடவுளரைப் போற்றிய நம் குமரகுருபர சுவாமிகளை, அவரே வேண்டி இரந்தும்கூட நம் கடவுளர்கள் வறுமையை தந்து வாட்டவில்லை என்பதோடு வளமையும் பெருமையும் தந்து அவரை வாழ்த்தியிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தாம்வாழ்ந்த காலம் அனைத்தும் மன்னருக்கு ஒப்ப மாபெரும் சிறப்போடும் செல்வச் செழிப் போடுமே வாழ்ந்துள்ளார் நம் சுவாமிகள். மீனாட்சி யம்மைப் பிள்ளைத் தமிழை இவர் மதுரை மீனாட்சி யம்மன் ஆலயத்தில், திருமலை மன்னர் முன்னிலை யில் அரங்கேற்றிக் கொண்டிருந்தார். வருகைப் பருவத் தில் ஒரு பாடல், தேனொழுகும் தமிழ்ச் சொற் களைப் பெய்து அன்னை மீனாட்சியை வரவேண்டி சுவாமிகள் பாடிய அத்தெய்வத் திருப்பாடல் இதோ:-

''தொடுக்கும் கடவுள் பழம் பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகுநறும்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்

தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்

உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே! மதுகரம் வாய்

மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!''

இப்பாடலைச் சுவாமிகள் பாடத் தொடங்கும் முன்பே அன்னை மீனாட்சி அழகுமிகும் ஒரு சிறுமியாக வந்து திருமலை மன்னன் மடியில் அமர்ந்து விட்டாள். பாடலை முடித்தபோது திருமலை மன்னனின் மார்பை அலங்கரித்திருந்த முத்தாரத்தைத் தாமே எடுத்து குமரகுருபரரின் திருமார்பில் சூட்டி அன்னை மீனாட்சி மறைந்தனள் என்றால் இவர் மன்னரொடு சரி நிகராகப் பெற்ற வாழ்விற்கும் புகழுக்கும் வேறு சான்றுகள் வேண்டுமோ?

குமரகுருபரர் தம் குருநாதரான மாசிலாமணி தேசிகரின் கட்டளைக்கு இணங்க காசிக்குச் சென்றார். கங்கை யமுனை சரஸ்வதி மூன்றும் கலக்கும் திரிவேணி சங்கமத்தையும், காசி விசுவநாதரையும் தரிசித்தார். காசியிலேயே ஒரு மடம் அமைத்துக் கொண்டு தமிழையும் சைவத்தையும் வடக்கில் வாழும் மக்களிடம் பரப்ப வேண்டுமென்று ஆசை கொண்டார். மடம் கட்டுவதற்கான நிலத்தை அப்பொழுது காசியை ஆண்டு கொண்டிருந்த முகமதிய மன்னனிடம் கேட்டுப்பெற எண்ணினார். அம்மகமதிய மன்னனுக்கு இந்திமொழி மட்டுமே தெரியும். ஆகவே அவனைப் பேட்டி காணத் தமக்கும் இந்தி மொழி கற்பித்துத்தர வேண்டுமென கலைமகளைக் குறித்துப் பத்துப் பாடல்களால் சகலகலாவல்லி மாலையைப் பாடினார்.

''மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்
வாய், படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல கோடி உண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே''

என்ற பாடலைக் குமரகுருபரர் பாடி முடித்ததும் கலைமகள் தோன்றி இவருக்கு இந்திமொழி பேசும் ஆற்றலை அளித்ததோடு இவர் மன்னரைச் சென்று காணும் வகையில் ஒரு சிங்கத்தையும் வரவழைத்துத் தர குமரகுருபரரும் அதன்மேல் ஏறி அரண்மனையில் இருந்தவர்கள் நடுங்கி வணங்க பாதுஷாவின் இருப்பிடத்தை அடைந்தார்.

''சிங்கவா தனத்தில் தாடி திகழுற வீற்றிருந்த
தங்கஆ ரஞ்சேர் பாது ஷாவினைக் குறுகு தற்குச்
சிங்கமேல் ஏறித்தாடி சிறக்கக் கண் காப்புப் பூண்டு
பற்று வார்கள் அஞ்சப் படர்ந்தனர் முனிவர் ஆங்கே''

(குமரகுருபரர் சரித்திரம்)

சிங்கத்திலே ஏறியவாறு வந்து குமரகுருபரரை கண்டு அச்சமும் வியப்பும் அடைந்த காசி ஆண்ட பாதுஷா, மிக்க மரியாதையோடு ஆசனத்திலிருந்து எழுந்து இறங்கி வந்து நம்முனிவருக்குச் சலாமிட்டார். குமரகுருபரர் இந்தி மொழியிலேயே அம்மன்னனிடம் அளவளாவி கங்கைக் கரையில் ஒரு மடாலயம் அமைத்திட இடம் தர வேண்டும் என்று மன்னனிடம் கூறினார்.

''இந்தியில் ஓதப் புகார், எமக்கொரு மடாலயத்தை
அந்தரத் தவரும் போற்றும் கங்கையங் கரையில்
ஆக்க
முந்திய மனையைத் தந்து மூவுல கேத்த நிற்பாய்
சிந்தியேல் எனக் கேட்டு திகைத்தனன்
வியந்தான் மன்னன்''

(குமரகுருபரர் சரித்திரம்)

மேலும் குமரகுருபரர் மன்னனிடம் இரண்டு கருடப் பறவைகள் எந்த இடத்தில் வலமாகப் பறக்கின்றவோ, அந்த இடத்தில் ஈசன் திருவருள் ஆணையெனக் கொண்டு மடாலயம் கட்ட விழைகிறேன்'' என்று கூற அவர் திருவுள்ளத்திற்கு இசைந்த மன்னனும் முனிவருடன் கேதாரகட்டத்துக்கு வந்து சேர்ந்தார். நம் குமரகுருபரரின் திருவிருப்பத்தின் படியே இரண்டு கருடப் பறவைகள் தம்முடைய இறகுகளை வீசி அப்பொழுது வானில் வலமாகப் பறக்க, அவை பறந்த வானிடத்திற்கு நேர்கீழே மன்னனும் இடம் வழங்க அவ்விடத்தில் அழகான மடத்தையும் கேதாரீஸ்வரர் கோயிலையும் நம் குமரகுருபர சுவாமிகள் கட்டிமுடித்தார். குமரகுருபரர் அமைத்த மடமே இன்றும் குமாரசாமி மடம் எனும் பெயரில் சிறப்புற விளங்கி காசியில் நம் சைவசமயப் பெருமையும், தமிழ் மொழியின் பெருமையும் நிலை நாட்டி வருகிறது என்றால், குமரகுருபரரின் திருத்தொண்டினை எப்படிப் போற்றுவது? இவ்வாறு சுவாமிகள் வறுமையை இரந்து வேண்டியிருப்பினும், வாழ் நாளெல்லாம் மன்னர்களும் துறவிகளும் போற்றப் புகழோடும் பெருமையோடும் திகழ்ந்து தம் சீடர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கி அவர்களிடம் மடத்தை ஒப்புவித்து 1688-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் தேய்பிறைப் பக்கம் மூன்றாம் நாள் காசி விசுவநாதரின் திருவடிக் கமல நீழலில் மேவி உலப்பிலா ஆனந்தம் அடைந்துள்ளார்கள்.

"ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரம் கொண்ட சைவ சித்தாந்தத்
தேன் அமுது.''

என்று சைவ சித்தாந்தத்தைத் தம் பண்டார மும்மணிக் கோவை நூலில் மிகச் சிறப்பித்துப் போற்றியுள்ள நம் குமரகுருபரரின் திருப்புகழும், சைவமும் தமிழும் வாழும் வரை இவ்வையத்தில் வாழ்ந்திருக்கும் என்பது நிச்சயம்.

"திமிர மதகற்றும் தெய்வக்கவிஞன்
குமர குருபரன் திருவடி வெல்க''

★★★

# தேவராயர் கண்ட முருகன்

– முனைவர் பேராசிரியர் ச. கணபதிராமன்

## இயற்கை எம்பெருமான்

கருணை முகம் ஓராறும், கரங்கள் ஈராறும் கொண்டு அற்றார்க்கும் அலந்தார்க்கும் வாழ்வளித்துக் காத்திடும், அலைவாய் அழகனான முருகப் பெருமானை நினைவிற்கெட்டாத நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்மக்கள் நெஞ்சுருகி வழிபட்டு வந்தனர்.

நக்கீரர் முதல் இக்காலப்புலவர்கள் வரை, எண்ணற்றோர் அந்தக் குறிஞ்சிக் கடவுளைக் கொழி தமிழால் பாடிப் பரவினர்.

குறிஞ்சியிலே தோன்றிய மனிதன் குறிஞ்சிக் கடவுளான குமரனைத் தன் காவல் தெய்வமாகக் கொண்டான். குறிஞ்சியில் தோன்றிய முருகன் முல்லை நிலத்தில் சிறந்து, மருதநிலத்தில் மகிழ்ந்து பாலை நிலத்தில் கொற்றவையின் குமரனாக வடிவெடுத்து நெய்தல் நிலத்தில் அந்த மக்களின் காவல் அரணாக இலங்குகிறான்.

நெய்தல் நிலமக்கள் சுறாவின் எலும்பினை நாட்டி அதனை முருகன் எனக்கொண்டு வழிபட்டு வந்தனர் என்பதைப் பழந்தமிழ் இலக்கியம் எடுத்தியம்புகிறது.

இயற்கை அழகில் முருகனைக் கண்ட நம் மக்கள், அவனுக்குக் கோயில் கட்டியும் வழிபட முற்பட்டனர். சிலப்பதிகாரம் இக்கோட்டத்தைக் குறிப்பிடுகிறது.

கோயில் கட்டி வழிபட முற்பட்டவர்கள், பின் நாட்களில், தத்துவ விளக்கங்களையும் தந்தனர்.

காட்டிலும் மேட்டிலும் கவின்பெறு துருத்தியிலும், கடல் அலைகளிலும், முருகனை கண்டு வணங்கியவர்கள், மந்திரங்களையும், தத்துவ விளக்கங்களையும் தந்து வழிபடத் தொடங்கினர். மந்திரச் சொற்களைத் தந்து, அம்மந்திரங்களுக்குத் தலைவனாகிய முருகனை வழி பட்டனர்.

## மந்திர வழிபாடு

மந்திர வழிபாட்டினை விளக்கமான வடிவில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த தேவராய சுவாமிகள் தந்தார்கள். கந்தசஷ்டிக் கவசம் என்ற அருமையான நூலின் வாயிலாக இதனைத் தந்துள்ளார்கள். இதற்கு சம காலத்திலும் பின்னரும் பற்பல கவச நூல்கள்எழுந்தனவாயினும், அவற்றை விட, கந்தசஷ்டி கவசத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. மற்றைய கவசங்கள் எல்லாம் 'காக்க, காக்க' என்று மட்டுமே கூறும். ஆனால் கந்த சஷ்டிக் கவசம், மந்திரங்களையும் தத்துவ விளக்கங்களையும் கூறிச் செல்கின்றது.

## பாமரரின் பாராயண நூல்

கந்த சஷ்டிக்கவசத்தை நாம் முருகனை நினைந்து உருகும் பாமரமக்களின் இலக்கியம், அல்லது நூல் என்று கூடக் குறிப்பிடலாம். இதனைப் பாமர மக்களின் பாராயண நூல் என்றும் இயம்பலாம்.

திருமுருகாற்றுப்படையினையும், திருப்புகழையும், கந்தர் கலிவெண்பாவினையும், வள்ளற் பெருமானின் பாடல்களையும், பாம்பன் சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள் பாக்களையும் அறியாத பாமர மக்கள் கந்த சஷ்டிக் கவசத்தை படித்துப் பாராயணம் செய்து வருவதை இன்றும் கண் கூடாகக் காணலாம்.

## திருவடிச் சிறப்பு

ஏறத்தாழ 240 அடிகளைக் கொண்ட இந்நூல் அகவற்பாவில் அமைந்துள்ளது.

துதிப்போருக்குத் துன்பம், வல்வினை அனைத்தும் நீங்கும் என்றும், நெஞ்சில் பதிப்போருக்குச் செல்வம் பலித்து செழித்து ஓங்கும் என்றும், நிஷ்டையும் கைகூடும் என்றும், தேவர்களின் சிறை மீட்க அமர் புரிந்து வெற்றி சூடிய அழகன் முருகனை வாழ்த்தி நூல் தொடங்குகிறது.

தெய்வங்களை விடத் தெய்வங்களின் திருவடிகளுக்குச் சிறப்பு, ஆற்றல் மிகுதி என்பர் ஆன்றோர். இம்முறையில் கந்த சஷ்டிக் கவசத்தின் முற்பகுதியில்

முருகப்பெருமானின் திருவடிச் சிறப்பு பேசப்படு கின்றது. இதனை தேவராய சுவாமிகள்

''பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட''

என்று குறிப்பிடுகின்றார். திருவடியைச் சிறப்பித்து, இந்திரன் போற்றும் முருகாவருக! மந்திர வடிவேல் வருக: வாசவன் மருகா வருக'' என்று அழைக்கின் றார். சரவணபவனார் சடுதியில் வருக என்று வேண்டு கிறார்.

**சரவணபவ**

சரவணபவ என்ற ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்து உச்சரித்து உச்சாடனம் செய்தால் நினைத்தது கைகூடும் என்பது ஆன்றோர் வாக்கு.

இந்த மந்திரத்தின் பேராற்றலை வள்ளற் பெரு மான் ஆறெழுத்துண்மை என்ற பகுதியில் உயர்ந்த முறையில் விளக்கியுள்ளார்.

பாம்பன் சுவாமிகள் இந்த மந்திரத்தை கூறும் முறையினையும், மூலமந்திரங்களோடு இணைத்துக் கூறினால் கிட்டும் பேறுகளையும் சிறப்பாகக் குறிப் பிட்டுள்ளார்கள். அது,

''ஓம் சரவணபவ என்று உருவேற்றினால்
பரமாத்மா வடிவு சித்திக்கும். ஐம்
சரவணபவ என்று உருவேற்றினால்
வாக்குவென்மை சிறக்கும். சௌ
சரவணபவ என்று உருவேற்றினால்
உடல்வன்மைபெறும். க்லீம்
சரவணபவ என்று உருவேற்றினால் உலகம்
தன்வயமாகும். ஸ்ரீம்
சரவணபவ என்று உருவேற்றினால்
செல்வம் சிறக்கும் க்ரீம் சரவண
பவ என்றுஉருவேற்றினால் நிலவளம்
தழைக்கும்'' என்பதாம்.

சரவணபவ என்னும் மந்திரத்தில் வரும் 'ச' மங்களத்தையும், 'ர' ஒளியையும், 'வ' சாத்விகத்தையும், 'ண' உறுதிஸ்யயும், 'பவ' அடியார்களுக்கு மங்களம் ஆகட்டும் என்பதையும் குறிக்கும்.

**சக்தியும் சிவமும்**

கந்த சஷ்டிக் கவசத்தில் ''ரரர, ரரர, ரிரிரிரிரி'' என்ற மந்திரச் சொற்கள் வருகின்றன. 'ர' என்பது 'அரகர' என்ற சிவனைக் குறிக்கும். 'ரி' என்பது சக்தியைக் குறிக்கும். 'ர' ஒளியினையும், 'ரி' பசுமை யினையும் அதாவது செழிப்பினையும் தந்திடும் ஆற்ற லுள்ளவை.

ரவணபவச என்று உருவேற்றினால் ஒளி யும், ரிவணபவ என்று உருவேற்றினால், பொருள் வளமும், விணபவ சரவண என்று உருவேற்றினால் வெற்றியும், நிபவசரவண என்று உருவேற்றினால் சாத்விகமும் கிட்டும் என்று சான்றோர்கள் கூறுவர்.

சஷ்டிக் கவசத்தில்
''ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி ஐயும்''
என்ற மந்திரப் பகுதி வருகின்றது.

இது, முருகப் பெருமான் சக்தி மந்திரத்தையும், சிவமந்திரத்தையும் ஒருங்கே கொண்டு, அவர்களின் வடிவாகவும் ஒளியாகவும் ஒளிர்கிறான் என்பதை உணர்த்தும் பகுதியாகும்.

ஐயும் கிலியும் சௌவும் என்பன பீஜங்கள். சக்தியும் அவள் மந்திரங்களும், சிவனும் சிவன் மந்தி ரமும் சிவசக்தி வேலனிடம் அமையப் பெற்றுள்ளன என்பதை இது உணர்த்துகின்றது.

**ஓசையும் ஒலியும்**

மந்திர நாயகனான முருகன் அடியார்களைக் காக்க வரும் தன்மையினை 'செககண' செககண' என்ற ஒலியோடு வருகிறான் என்கிறார் தேவராய சுவாமிகள்.

இச்சொல்லுக்கு நில உலகிற்கு அடியார் களைக் காக்க விரைந்தோடி வருவான் வெற்றிவேலன் என்பது பொருளாம்.

''டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுகுண''
என்பது மந்திரச் சொற்களாகிய சதங்கை ஒலிகள்.

மொக மொக என்னும் சொற்களுக்கு நாதம் என்பது பொருள். நக நக என்பதற்கு ஒளி என்பது பொருள். நாதத்திலிருந்து, உலகம் பிறந்து உயிர்கள் சிறக்கின்றன. உலகம் அனைத்திற்கும் வித்தாக இருப் பவன் முருகனே என்பது இதன் விளக்கம். ''டகு டகு டிகுடிகு டங்கு டிங்கு'' என்பவை ஒலி ஓசை வடி வான மந்திரச் சொற்கள். அருணகிரிப் பெருமான்

''தந்திதிமி, தோதிதீதித் தீதி
தந்ததன, தான தானத்தான
செஞ்சனகு சேகு''
என்று குறிப்பிடுவது இங்கு நினைக்கத்தக்கது.

குமர குருபரர் 'நாதக் கழல்' என்று குறிப்பிடுவதும், நாதமாகிய ஒலியினைத் திருவடி என்று இயம்புவதும் இங்கு எண்ணத்தக்கது.

லாலாலாலா என்பது மகிழ்வால் வரும் பாட்டொலி. லீலா லீலா என்பது லீலைகள் புரிந்திடும் முருகன் என்பதைக் குறிப்பதாகும்.

காத்திடு கார்த்திகேயா!

இத்தகைய மந்திரச் சொற்களுக்குத் தலைவனான முருகப்பெருமானே என்னுடைய உடம்பையும் உடலுறுப்புக்களையும் காத்தருள்க, எங்கள் பகையினையும் அழித்திடுக என்று வேண்டுகிறார்.

பகையை நீக்கிடு

மனிதர்களாலும் விலங்குகளாலும் இயற்கைகளாலும் மாந்திரிக சூன்யங்களாலும் வருகின்ற தீங்குகளைக் களைந்தெறிந்திடுக என்று சஷ்டிக் கவசம் குறிப்பிடுகிறது.

உடலில் தோன்றும் பிணிகளைக் கூறி, அவை வராமல் காத்திடுக, வந்த பிணிகளை நீக்கி அருள் பாலித்திடுக என்றும் இரவும் பகலும் எப்போதும் என்னை காத்திடுக என்றும் வேண்டுகிறார்.


கருணை வாரிதியே

முருகப்பெருமானே! உன்னை வணங்க உன் நாமத்தைப் போற்றிப் புகழ்ந்திட நீ எனக்கு அருள் செய்வாயாக. மலைகளில் வீற்றிருக்கும் வேலனே! திரிபுரங்களை எரித்த சிவனைப போன்றவனே! பேரொளிப்பிழம்பே! மாலின் மருகா! கார்த்திகை மைந்தா! தணிகை மலை தயாநிதியே! கதிர்காம வேலா! போரூர் புண்ணியனே! திருச்செந்தூர் செல்வா! சண்முகா! காத்தருள்வாய் கருணைக் கடலே! சித்தியெல்லாம் பெற்று சிறப்புடன் வாழ அருள் பாலிப்பாயாக'' என்று நெஞ்சுருகி வேண்டுகிறார்.

பாராயண முறை

முருகனை வேண்டி இந்நூலைப் பாராயணம் செய்யும் முறையினைக் குறிப்பிடுகிறார்.

பாலன் தேவராயன் என்போனாகிய யான் செய்த இக்கவசத்தை காலையில் மாலையில் கருத்தூன்றி நீராடி, நீறிட்டு, ஒழுக்கமுடன் நின்று, சிந்தை அலைபாயாமல் முப்பத்தாறு முறை ஓதுவீர்களாக என்று உரைக்கின்றார்.



முப்பத்தாறு முறை ஓதிடின் உயர்ந்ததே. இது இயலாதவர்கள் நாள் ஒன்றிற்கு மூன்று முறை ஓதலாம். இதுவும் இயலவில்லையெனில் காலையில் நீராடி, கருத்தூன்றி ஒரு முறை ஓதலாம். இதுவும் இயலாதவர் 'ஓம் சரவணபவ' என்று நூற்றியெட்டு முறை கந்தனை வந்தனை செய்து உச்சாடனம் செய்யலாம்.

பாராயணப்பயன்

கந்த சஷ்டிக்கவசத்தை ஓதிவரின் நமது அகப்பகை, புறப்பகை ஓடிவிடும். உடல் நலம் பெறும். உள்ளம் வளம் பெறும். ஈரெட்டான பதினாறு செல்வங்கள் அமையும். எட்டு இலக்குமிகளும் நம்மிடம் வந்து அமர்ந்து என்றும் நீங்காதிருப்பர்.


கந்த சஷ்டிக் கவசத்தை ஓதிடின் வரும் பயனைக் கூறிய தேவராய சுவாமிகள், வேலவா போற்றி! வெற்றித் திருவே போற்றி! வள்ளி மணாளா போற்றி! கந்தா போற்றி, கடம்பா போற்றி என்றெல்லாம் போற்றி அவனைச் சரணடையுங்கள்! அவன் சடுதியில் வந்து நம்மைக் காப்பான் என்று நிறைவு செய்கிறார்.

வேலும் மயிலும் துணை
வெற்றிவேல் முருகன் துணை.

★★★

# இறைவனை எங்கே காணலாம்?

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



அன்னையின் வயிற்றில் அவதார நேரம்
அன்னையும் அறியாள்; அவள்மகவும் அறியா;
அன்னை ஆவதும், அருமகவு பிறப்பும்,
அன்னையின் செயலா? ஆக்கலின் முடிவா? (1)

கருவினில் உயிரும், கலந்திட உடலும்,
கருவினில் உதித்து, கருப்பையில் வளர்ந்து,
கருத்துடன் பிறப்பதும், காலத்தின் படைப்பா?
கருப்பை வருமுன் கருஉயிர் வாழ்ந்ததோ? (2)

பிறப்பே முதலா? பிறப்பதும் தொடரா?
பிறப்பது தொடர்ந்தால், பிறந்தவை அழியா;
பிறந்தவை இறப்பது பிறப்பின் இயற்கை;
பிறந்தவை இறப்பதும், பிறப்பைத் தொடரவா? (3)

பிறக்குமுன் உயிரினம் பிறிதொரு வாழ்வில்,
பிறந்தும் இறக்காது, பிரியாத நிலையில்,
பிறந்த உடல்போய் பிரியாத ஆத்மா,
பிறப்பின் சுழலில் பிரியாத நிலைபெறும். (4)

பிறந்த உயிரினம் பிரபஞ்ச சேர்க்கையில்
பிரியாத அங்கமாய் பெருநிலை பெற்றதால்,
பிறப்பும், இறப்பும், பிறவியின் இடைவெளி;
பிறந்தவை இறந்து, பிரபஞ்சம் சேரும். (5)

இறைவனைக் காணும் இப்பெரும் உண்மையும்,
இறைவன் உறையும் இடமெலாம் அறிந்தும்,
இறைவனைக் காண எங்கு சென்றாலும்;
இறைவன் நம்மையே இறைவனாய்ச் செய்வான் (6)

அன்னை இறைவனை அருமகவில் காண்பாள்,
அருமகவும் அன்னையை இறைவனாய்க் காணும்;
அன்னை உலகின் ஆக்கும் சக்தி,
அன்னையே இறைவன்; அகிலமே அன்னை; (7)

கணவன் இறைவனை மனைவியில் காண்பான்;
கணவனை மனைவி, இறைவனாய்க் காண்பாள்;
கணவனே தந்தையாய் சந்ததிக்கு இறைவன்,
சந்ததியைத் தந்தை இறைவனாய்க் காண்பான்; (8)

இயற்கையின் எழிலில் இறைவனைக் காண்போன்,
இதயத்தின் அமைதியில் இறைவனைக் காண்பான்;
இயற்கையின் எல்லா உயிரிலும் இறைவன்;
இயற்கையை நேசிப்போன், இறைவனை நேசிப்பான். (9)

தன்னுள் இறைவன், தங்கிடும் உண்மையை,
தன்உள் மனத்தில், தவத்தால் தேடினால்,
தன்னுள் பிரபஞ்சம் தானே இயங்கிட,
தன்உள் மனத்தில் தாண்டவம் செய்வானே. (10)

★ ★ ★

# கந்த சஷ்டி மகிமை

- முனைவர் கோமதி சூரியமூர்த்தி, மதுரை

இக்கட்டுரையில் முதற்கண் கந்தன் என்ற சொல்லுக்குப் பொருள் கூறப்படுகின்றது. பின் சஷ்டி என்பதற்கு விளக்கம் தரப்படுகின்றது. கந்த சஷ்டி என்பது என்ன? அஃது ஆறு நாட்கள் கொண்டாடப் படுவதன் காரணம் என்ன என்பது விளக்கப்படுகின் றது. கந்தசஷ்டி விழாவாகவும், விரதமாகவும் எவ் வாறு கொண்டாடப்படுகிறது என்று கூறப்படுகின் றது. விழாவும், விரதமும் கொண்டாடுவதால் ஏற் படும் பலன்கள் விளக்கிக் கூறப்படுகின்றன.

**கந்தன் - சொற்பொருள் விளக்கம்**

கந்தன் என்ற சொல்லுக்குப் பகைவர்களுடைய பராக்கிரமங்களை வற்றச் செய்கிறவன் எனப் பொருள் என்று வடமொழி நிகண்டு கூறுகின்றது. சூரபன்மன் போன்ற அசுராதியர்களின் பராக்கிரமங்களை வற்றச் செய்தவன் முருகப்பெருமான் ஆதலால் அவன் கந்தன் எனப்பட்டான்.

கந்தன் என்ற சொல்லுக்குச் சேர்க்கப்பட்ட வன் என்பது பொருள்.

''அந்தமில்லதோர் மூவிரு வடிவும் ஒன்றாகிக்
கந்தன் என்று பேர் பெற்றனன் கவுரிதன் குமரன்''
(கந்தபுராணம்)

''சேயவன் வடிவம் ஆறும் திரட்டி நீ
ஒன்றாய்ச் செய்தாய்
ஆயதனால் கந்தன் ஆமெனும் நாமம் பெற்றான்''
(கந்தபுராணம்)

என்று கந்தபுராணம் கூறுகின்றது.

''ஆறுமோர் உருவதாக ஆக்கலிற் கந்தனானான்''
என்று தணிகைப்புராணம் கூறுகின்றது.

''அன்னவள் கண்டு அவ்வுருவம் ஆறினையும்
தன் இரண்டு கையால் எடுத்தணைத்து கந்தன்
எனப் பேர் புனைந்து''

என்று கந்தர்கலிவெண்பா (கண்ணி 83-84) கூறு கின்றது. கந்து என்ற சொல்லுக்கு யானை கட்டும் தறி என்ற பொருளும் உண்டு. அது ஒரு பற்றுக் கோட்டினைக் குறிக்கும். அன் - ஆண்பால் ஒருமை விகுதி. ஆன்மாக்கட்கு உலகப் பற்றுக்களை அழிக் கும் ஒரு பற்றுக்கோடாக முருகப் பெருமான் விளங்கு வதால் அவன் கந்தன் என்னும் பேர் பெற்றான். உயிர்கட்கு இருவகையான பற்றுக்கள் உண்டு. 1. இறைப்பற்று. 2. உலகப்பற்று. உயிர்கள் இறை வனைப் பற்றினால் இன்பத்தையும், உலகைப் பற்றினால் துன்பத்தையும் அடையும். உலகப் பற்றை விடவேண்டுமானால் உயிர்கள் இறைவ னைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினைப் அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'' (குறள், 350)

என்கின்றார் வள்ளுவர்.


**சஷ்டி - சொற்பொருள்விளக்கம்**

சஷ்டி என்ற சொல் ஆறாம் திதியைக் குறிக் கும். அறுபது என்றும் பொருள் படும். அறுபது வயது நிறைந்தவர்கள் சஷ்டியப்த பூர்த்தி என்று கொண்டாடு வதால் இதனை அறியலாம். இங்கு சஷ்டி என்ற சொல் ஆறாம் திதி என்றே பொருள்படும்.

**கந்த சஷ்டி - விளக்கம்**

ஒரு மாதத்தில் அமாவாசை கழிந்த பதினைந்து தினங்கள் வளர்பிறை என்றும், பௌர்ணமி கழிந்த பதினைந்து தினங்கள் தேய்பிறை என்றும் கூறப்படும். தேய்பிறையில் முக்கியமான நாட்கள் துவாதசி, திர யோதசி, சதுர்த்தசி, அமாவாசை என்பன. வளர் பிறையில் முக்கியமான நாட்கள் பிரதமை, துவி தியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி முதலியன. வளர்பிறை சஷ்டி முக்கியமானது. அதுவும் ஐப்பசி மாதம் வரும் வளர்பிறை சஷ்டியே கந்த சஷ்டிநாள் எனப்படும்.

காசிபர் என்ற முனிவர்க்கும், மாயை என்ற அரக்கிக்கும் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று மகன்களும், அயமுகி என்ற மகளும் பிறந்த னர். சூரபன்மன் சிவபெருமானை நோக்கிக் கடுமை யான விரதம் இருந்து சிவசக்தியாலன்றி வேறு யாரா லும் கொல்லப்படாத வரம் பெற்றிருந்தான். வரம் பெற்ற அவன் தர்ம வழியில் நடவாது அதர்ம வழியில் செல்லலானான். தேவர்களைக் கொடுமைப்படுத்திச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான். பிற தேவர்கள்



எல்லாம் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து தேவர்களைச் சிறைமீட்கும்படி இறைஞ்ச சிவபெருமான் தன் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு அனல் பொறிகளைத் தோற்றுவிக்க அவை வாயுபகவான், அக்கினி பகவான் முதலானவர்களால் சுமந்து செல்லப்பட்டு கங்கையில் விடப்பட்டுப் பின் சரவணப்பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகள் ஆகின. பின் அந்த ஆறுருவும் ஒருருவமாயிற்று. கந்தன் என்னும் பேரும் பெற்றது. ''தான் வளர்த்தது நச்சுமரமாயினும் கொல்லார்'' என்ற திருவாசகக் கருத்துப்படி (திருச்சதகம், 96) வரம் கொடுத்த சிவபெருமானே சூரபன்மனை அழிக்காது, தன் சக்தியிலிருந்து ஆறுமுகப்பெருமானை தோற்றுவித்து அவனைக் கொண்டு சூரபன்மனின் ஆணவத்தை ஒடுக்கினார். சிவன் வேறு, முருகப் பெருமான் வேறு அல்லர். இருவரும் ஒருவரே என்பது கந்தபுராணத்தில் ஆசிரியர் கூற்றாலும், பிற கதை மாந்தர் கூற்றுக் களாலும் உணர்த்தப்படுகின்றது. சூரபன்மனின் ஆணவத்தை அடக்க அவனுடன் முருகப்பெருமான் நேரடியாகப் போர்புரிந்தது ஆறு நாட்கள் ஆகும். இந்த ஆறுநாட்களும் தேவர்கள் உண்ணாமலிருந்து முருகப் பெருமானை நோக்கி தவமிருந்தனர். எனவே அந்த ஆறு நாட்களும் சைவர்களால் கந்தசஷ்டி வீழாவாகவும், விரதமாகவும் கொண்டாடப்படுகின்றது. ஆறாவதுநாள் சூரபன்மன் ஒடுக்கப்பட்ட நாள். அதுவே கந்தசஷ்டி நாள் எனப்படும்.

**கந்த சஷ்டி விழா**

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் இரண்டு ஆகும். 1. சந்திரனைச் சடையில் சூடிய சிவபெருமானின் அடியவர்க்கு அமுது அளித்தல். 2. சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயிலில் நடைபெறும் திருவிழாக்களை கண்ணினால் கண்டு களித்தல் (திருஞானசம்பந்தர் புராணம், செ. 1087).

கந்தப்பெருமானின் திருமுகங்கள் ஆறு. அவர் எழுந்தருளியிருக்கும் படைவீடுகள் ஆறு. அவனுக்குரிய மந்திரமும் ஆறெழுத்தாகும். (ஓம் சரவண பவ). ஆறு படை வீடுகளிலும் கந்தசஷ்டி விழா ஆறு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

மகோற்சவ விளக்கம் என்னும் நூல் விழாக்களைப் பின்வருமாறு பாகுபடுத்திக் கூறுகின்றது.

1. கொடியேற்றி வேள்வி செய்து விழாக் கொண்டாடுதல். அது சாகல்யம் (நலம் பெறுதல்) எனப்படும்.
2. கொடியேற்றமின்றி வேள்வியுடன் நடைபெறுவது. அது பவனம் (தூய்மை பெறுதல்) எனப்படும்.
3. கொடியேற்றமும், வேள்வியுமின்றிக் காப்புக் கட்டுடன் நடைபெறுவது சாந்திகம் (கழுவாய்) என்று கூறப்படும்.

4. ஒருவேளை இறைவனை எழுந்தருளச் செய்தல் மாங்கல்யம் (மங்கலப்பேறு) என்று கூறப்படும். (மகோற்சவ விளக்கம், ப. 4). இதில் கந்த சஷ்டி விழா இரண்டாம் வகையைப் பவனத்தைச் சார்ந்தது.

### கொண்டாடப்படும் முறை

ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் முதல் ஆறு நாட்களும் முருகனைத் தம்பம், பிம்பம், கும்பங்களில் பூசை செய்வர்.

### தம்பத்தில் பூசித்தல்

ஓம குண்டத்தை ஆறுகோண வடிவில் அமைப்பர். அதனருகே வேள்வி வளர்க்கக் காப்புக் கட்டிய பிரதான சிவாச்சாரியாரும், மந்திரங்களைத் தட்டாமல் கூற உதவும் சாதகாச்சாரியாரும் அமர்ந்திருப்பர். வேள்வித் தீயினை எழுப்பும் பலவகை மரங்களின் சுள்ளிகளைப் பயன்படுத்துவர். இவை மருத்துவப்பயன் கொண்டவை. மர அகப்பையினால் நெய்யை ஊற்றி வேள்வித் தீயைப் பெருக்குவர். நவதானியங்கள் படைக்கப்படுகின்றன. நவதானியங்களுள் கோதுமை சூரியனுக்கும், வெண் கடுகு சந்திரனுக்கும், துவரை செவ்வாய்க்கும், பாசிப்பயிறு புதனுக்கும், கடலை வியாழனுக்கும், வெள்ளை மொச்சை சுக்கிரனுக்கும், எள் சனிக்கும், உளுந்து இராகுவிற்கும், காணம் கேதுவிற்கும் உரியதென்ப. மருந்துப் பொருட்கள் பல வேள்வியில் படைக்கப்படுகின்றன. பச்சை மஞ்சள், விறலி மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வெற்றிவேர், விலாமிச்சை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், குங்குலியம், பூவாங்கிழங்கு, தாமரைக் கிழங்கு, நெல்பொரி, பொரி கடலை, பேரீச்சம் பழம், கற்கண்டு, முந்திரிப்பழம், முந்திரிப்பருப்பு, கிஸ்மிஸ், ஏலம், கிராம்பு, சாதிக்காய், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை முதலியன படைக்கப்படுகின்றன. பழங்கள் பல இடப்படுகின்றன. வேள்வி நிறைவு செய்யும்போது நாதசுரம் முழங்கும். ஒரு தாம்பாளத்தில் வைக்கப்பட்டுள்ள தேங்காய், வெற்றிலை, பாக்கு, ஏலம், கிராம்பு, கஸ்தூரி, கோரோசனை முதலிய பொருட்களைப் பட்டினால் சுற்றி வேள்வித்தீயிலிட்டு வேள்வியை நிறைவு செய்வர்.

### பிம்ப வழிபாடு (உருவ வழிபாடு)

தம்ப வழிபாடு முடிந்தபின் வேள்விக் கூடத்திலுள்ள பிம்பங்கட்குத் திருமுழுக்கு நடைபெறுகிறது. உச்சிக் காலம் முடிந்தபின் வேள்விக் கூடத்திலுள்ள திருமேனிகட்குச் சோடச உபசாரம் (பதினாறு வகை உபசாரம்) செய்யப்படும்.

தீபாராதனை முடிந்தபின் கந்தப்பெருமான் வள்ளி, தெய்வயானைத் திருமேனிகளைச் சப்பரத்தில் வைத்து அலங்கரித்து உலாக் கொண்டுவருவார்.

### கும்பவழிபாடு

பிள்ளையாரை வழிபட்டுப் பின் காலையில் சூரிய கும்பத்திற்குப் பூசை செய்கின்றனர். மாலையாயின் சந்திர கும்பத்திற்குப் பூசை செய்கின்றனர். கும்பத்தில் புனித ஆறுகளின் நீரினைப் பாவனையாக வரச் செய்து அக்கும்பத்தினுள் மாவிலையிட்டு வேள்விக் கூடத்தைத் தூய்மை செய்கின்றனர். இதனைத் தவசுத்தி என்பர். பின் பஞ்ச கவ்வியத்தைக் கும்பத்திலுள்ள பொருட்களைச் சுற்றிலும் தெளிக்கின்றனர். இதைச் சூக்கும சுத்தி என்பர். பின்பு பிரதான ஆசாரியரும், சாதகாச்சாரியரும் தம்மை முருகப் பெருமானாகப் பாவிப்பர். இது நியாசம் எனப்படும். பின் பிரதான ஆசாரியார் கும்பங்களைத் தருப்பைப் புல்லினால் முடிச்சிட்டு முருகன், வள்ளி, தெய்வயானை ஆகியோரை மந்திரங்களினால் எழுந்தருளச் செய்வர். இதனை ஆவாகனம் என்பர். கும்ப வழிபாட்டில் தான சுத்தி, பூதசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, கும்பசுத்தி என்ற ஐவகை சுத்திகள் செய்யப்படும். இஃது உயிர்களிடத்திலுள்ள ஐவகை மலங்களைப் போக்குவதை உணர்த்தும். ஆறாம்நாள் மாலை சூரனை வெல்லும் திருவிழா தொடங்குகிறது. முதலில் யானை முகாசுரனுடன் போர் தொடங்கும். யானை முகன் வலமிடமாகச் சுவாமியைச் சுற்றி விருவான். தலையில் பட்டுக் கட்டிய பட்டர் வேலால் அச்சூரன் நெற்றியில் குத்தி வீழ்த்துகிறார். அதே உடலில் சிங்கமுகாசுரன் தலை பொருத்தப்படுகின்றது. பட்டர் சிங்கமுகன் நெற்றியிலும் வேலால் குத்தி வீழ்த்துகின்றார். அடுத்து சூரபன்மன் தலை அதே உடலில் பொருத்தப்பட்டு வீழ்த்தப்படுகின்றது. நான்காவதாக மாமரமும், சேவலும் அவ்வுடலில் பொருத்தப்படுகின்றன. மாமரம் வெட்டுண்டதும் சேவலும், மயிலுமாகி முருகப் பெருமானுக்குக் கொடியும் வாகனமும் ஆகும். ஒரே உடலில் மூன்று தலைகள் பொருத்தப்படுவதும் அவை வீழ்த்தப்படுவதும் ஒவ்வொரு உயிரிலும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உள்ளன என்பதையும், அவை முருகப் பெருமான் அருளால் நீக்கப்படவேண்டும் என்பதையும் உணர்த்தும்.

### கந்த சஷ்டி விழா மகிமை

மகிமை என்றால் சிறப்பு, பலன் என்று பொருள். கந்த சஷ்டி விழாவின் சிறப்புக்கள் யாவை எனக் காண்போம்.

''ஆறு நாட்கள் கூடி ஒரு கொக்கு (மாமரம்) பட்டது. அகப்பட்ட கொக்கைப் பிடித்து ஒரு சட்டியில் (ஆறாம் நாளில்) வைத்துச் சாறாக்கி வேதப்பிராமண ரும் சைவரும் கொண்டாடுகின்றனர். (சாறாக்குதல் என்றால் திருவிழாக் கொண்டாடுதல் எனப் பொருள்) என்று குற்றாலக்குறவஞ்சி கூறுகின்றது. இவ்விழா வானது சாதி மத வேறுபாடின்றி, ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி கொண்டாடப்படுவதால் சமுதாய நல்லிணக்கத்தை உண்டாக்குகிறது எனலாம். உயிர் களிடத்திலுள்ள மும்மலங்களும் முருகப்பெருமான் அருளால் நீங்கும்.

"தீயவை புரிந்தாரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர்'' (கந்தபுராணம்)

என்று கச்சியப்ப சிவாசாரியார் கூறியபடி உயிர்க ளிடத்தில் உள்ள தீயகுணங்கள் போக்கப்பட்டுத் தூய்மை அடைவர்.

### கந்த சஷ்டி விரதம்

விரதம் என்ற சொல்லுக்குத் தவம், சத்தியம், பாரணை, நோன்பு எனப் பல பொருள் உண்டு.

''வ்ரத சங்கல்ப பூர்வக புண்ய கர்ம'' என்று வடமொழி அகராதி கூறுகின்றது. சங்கற்பத்துடன் செய்யப்படுகின்ற சமய காரியமும், புண்ணியச் செயல் களும் விரதம் எனப்படும். வசிட்ட முனிவர் கருவூரை ஆண்ட முசுகுந்தச் சக்கரவர்த்திக்குக் கந்தப் பெருமா னின் விரதங்களாக வெள்ளிக்கிழமை விரதம் (வார விரதம்), கிருத்திகை விரதம் (நட்சத்திர விரதம்), சஷ்டி விரதம் (திதி விரதம்) என்ற மூன்றினைக் கூறுகின் றார். இங்கு நாம் கந்தசஷ்டி விரதம் பற்றி காண் போம்.

### கந்த சஷ்டி விரத காலம்

''வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய
தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர்
யாருஞ்
சொற்படு துலையின் திங்கள் சுக்கிலபட்சம் தன்னில்
முற்பகல் ஆதியாக மூவிரு வைகல் நோற்றார்''

என்று கந்தபுராணம் (கந்த விரதப்படலம், செ. 20) கூறுகின்றது. துலையின் திங்கள் என்றது ஐப்பசி மாதமாகும். சுக்கில பட்சம் - வளர்பிறை. ஐப்பசி மாதம் வளர்பிறையில் முதல் ஆறுநாட்கள் கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படும்.

### விரதம் அனுட்டிக்கப்படும் முறை

''ஆறுநாட்களும் உமிழ்நீர் கூட விழுங்காது இருப்பவரும் உண்டு. இவ்வாறு செய்ய இயலாதவர் கள் நண்பகலில் ஆறு மிளகையும், ஆறுகை நீரை யும் அருந்தலாம். உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரத மாதலின் பழச்சாறு அறவே கூடாது'' என்கின்றார் ச. தண்டபாணிதேசிகர் (முருகன், ப. 134)

### உலக வழக்கில் நோன்பிருப்பவரை பின்வருமாறு பாகுபடுத்தலாம்

1. உமிழ்நீரும் விழுங்காது உண்ணா நோன்பிருத்தல்
2. உண்ணா விரதத்துடன் மௌன விரதமும் இருத்தல்
3. பழச்சாறு மட்டும் அருந்துதல்
4. இரவு மட்டும் பாலும், பழமும் உண்ணல்
5. பிற்பகல் மட்டும் உணவு உண்ணுதல்
6. நாளில் ஏதாவது ஒருவேளை மட்டும் உண்ணுதல்
7. திருமால் கோயிலில் வழங்கப்படும் துளசியும், தண்ணீரும் மட்டும் அருந்துதல்.

நோன்பு காலத்தில் முருகப் பெருமானைத் தியானித்துத் திருப்புகழ், கந்தசஷ்டிகவசம், சண்முகக் கவசம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர்கலி வெண்பா போன்ற முருகன் துதிப்பாடல்களை ஓதவேண்டும். முருகப் பெருமானைத் தியானிக்க வேண்டும். முருகப்பெருமானின் திருவுருவத்திற்கு அபிடேகத்திற்கு வேண்டிய பொருட்களைக் கொண்டு செல்லவேண்டும்.

முருகப் பெருமானைத் தியானித்தல் - மன வழிபாடு, அவன் புகழ் பாடுதல் - வாக்கு வழிபாடு. பூசைக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தல் காய வழிபாடாகும். இவ்வாறு திரிகரணங்களாலும் வழிபாடு செய்வது திரிகரணங்களால் செய்த வினை களைப் போக்கும். உபவாசம் இருத்தல், நோற்பவர் களை இடத்தாலும், மனத்தாலும் முருகப் பெரு மானின் அருகில் இருத்தும். மேலும் உபவாசம் இருப்பது விஞ்ஞான ரீதியாகவும் உடலுக்கு நன்மை பயக்கும்.

''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்பது பழமொழி. இதன் உட்கருத்துக் கந்தசஷ்டி விரதம் இருந்தால் கருப்பப்பையில் குழந்தை வரும் என்பதாம். எனவே கந்த சஷ்டி விரதமிருந்தால் பிள்ளைப்பேறு கிட்டும். மேலும் நோய் நீங்கும்.

ஆன்மா தூய்மை அடையும். விரதமிருப்பவர் நாள் தோறும் கோயிலுக்குச் சென்று பிரதட்சணம் செய்கின் றனர். பிரதட்சணம் என்ற சொல்லில்

| | | |
|---|---|---|
| ப்ர | - | பவநாசம் |
| த | - | மோட்சம் |
| க்ஷ | - | வியாதிநாசம் |
| ணம் | - | செல்வப்பேறு |

இவற்றை உணர்த்தும் என்று அம்சுமான் என்ற ஆகமம் கூறுகிறது. எனவே விரதமிருந்து கோயிலை பிரதட்சணம் செய்பவர்கள் இந்நால் வகைப் பலன்களைப் பெறுவர். விரதமிருப்பது நோற்பாளர்களிடம் முருகப் பெருமானிடம் பக்தியை உண்டாக்கும். ''இன்பவழிப்பட்டு நிற்பதாகிய பக்தி மார்க்கமே, அறிவின் வழிப்பட்டு நிற்பதாகிய ஞான மார்க்கத்தினும் சிறந்தது'' என்று மறைமலையடி கள் கூறுவார்.

''ஆறுசமயக் கடவுள் வேறு வேறின்றி யான்
ஒருவனே அங்கங்கிருந்து
அன்பர்க்கு முக்திதிரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதன மணியே'' (போரூர் பிள்ளைத் தமிழ், சிறுபறைப்பருவம், 3)

என்று சிதம்பரசுவாமிகள் கூறுகின்றார்.

''எல்லாக் கடவுளும் ஓர் வடிவாகியிருந்த செவ்வேள்'
(ஆறெழுத்து அலங்காரம், 98) என்றும்,

''ஆறுமுகமும் தன்முகமாம் என்றறியும் அன்பர்
வீறு சிந்தைக்கிடை வீற்றிருக்கும் குகன்''
(மயிலலங்காரம், 98)

என்றும் தண்டபாணி சுவாமிகள் கூறுகின்றார். எனவே கந்த சஷ்டி விரதமிருந்து முருகனை வழிபட்டால் ஆறு தெய்வ வழிபாட்டின் பலனைப் பெறலாம். ஆறுதெய்வ வழிபாட்டின் பலன்கள் யாவை?

| | | |
|---|---|---|
| சிவ வழிபாடு | - | பிறவாநெறி அடைதல் |
| விஷ்ணு வழிபாடு | - | வாழ்வில் செல்வம் பெருகல் |
| விநாயகர் வழிபாடு | - | செய்யும் செயல் இடையூறு இல்லாமல் முடிதல் |
| முருக வழிபாடு | - | அழகு, தெய்வத்தன்மை, இனிமை பெறல் |
| சக்தி வழிபாடு | - | செயலில் முழுமையான ஆற்றல்பெருகல் |
| சூரிய வழிபாடு | - | உடல் ஆரோக்கியம் பெறல் |

என்பது நம் முன்னோர்கள் அனுபவத்தில் கண்ட உண்மை. கந்தப் பெருமானை நினைந்து கந்த சஷ்டி விரதம் இருப்பதால் இந்த ஆறுவகைப் பலன்களையும் ஒருங்கே பெறலாம். ஆறுமுகப் பெருமானின் ஆடல்கண்டு சிவன் சக்தியிடம் பின் வருமாறு கூறுகின்றார்.

''ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன்
யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும்
உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு
அருள வல்லான்''
(கந்தபுராணம்).

எனவே முருக வழிபாட்டால் திருவும், ஞானமும், வீடுபேறும் கிட்டும்.

''முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார் வியாதி
அடைந்து நையார்
ஒரு காலமும் துன்பம் எய்தார் பரகதி யுற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே''

என்று சிதம்பர சுவாமிகள் கூறியபடி கந்தசஷ்டி விரத மிருந்து முருகனை வழிபடுபவர்கள்,

1. செல்வம் பெறுவர்
2. வியாதி அடையார்
3. துன்பம் அடையார்
4. பேரின்பம் துய்ப்பர்
5. எமபயம் அடையார். நரகவேதனை இல்லை.

முருக வழிபாட்டால் விளையும் நன்மைகள் பலவானாலும், விரதமிருப்பவர்கள் முருகுப் பெருமா னிடம் வேண்ட வேண்டியது அவனது அருளே ஆகும்.

''கோலம் நீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரர் அரசினைக் கனவினும் வெஃகேன்
மால் அயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத்து அன்பையே வேண்டுவன்
தமியேன்''

என்று முருகனிடம் வீரவாகு தேவர் வேண்டியது இங்கு நினைவு கூர்க.

''யாம் வேண்டுவது பொன்னும் பொருளும்
போகமும் அல்ல
நின் பால் அன்பும், அருளும், அறனுமே''



என்று பரிபாடல் கூறுவதும் இங்கு நினைவு கூரத் தக்கதே. அவனுடைய அருள் இருந்தால் ஏனைய நலன்களெல்லாம் தானே வந்தடையும்.

### முடிவுகள்

1. கந்தன் என்ற சொல்லுக்குப் பகைவர்களுடைய பராக்கிரமங்களை வற்றச் செய்கிறவன் என்று பொருள். சூரபன்மன் போன்ற அசுராதியர் களின் பராக்கிரமங்களை வற்றச் செய்வதால் அவன் கந்தன் எனப்பட்டான்.

2. கந்தன் என்ற சொல்லுக்குச் சேர்க்கப்பட்ட வன் என்று பொருள். ஆறுருவும் ஒருருவமாகச் சேர்க்கப்பட்டவனாதலால் கந்தன் எனப்பட் டான்.

3. கந்து என்ற சொல் பற்றுக் கோட்டினைக் குறிக் கும். ஆன்மாக்கட்கு உலகப் பற்றுக்களை அழிக் கும் ஒரு பற்றுக்கோடாக முருகப் பெருமான் விளங்குவதால் கந்தன் எனப்பட்டான்.

4. சஷ்டி என்பது ஆறாம் திதியைக் குறிக்கும்.

5. கந்தசஷ்டி என்பது ஐப்பசிமாதம் சுக்லபட்சம் ஆறாம் நாளாகும். சூரபன்மனை ஒடுக்கிய நாள் அது.

6. கந்த சஷ்டி ஆறுநாட்கள் விழாக்களாகவும், விரத மாகவும் கொண்டாடப்படும்.

7. கந்தப்பெருமானின் முகங்கள் ஆறு. அவனுக் குரிய மந்திரம் ஆறெழுத்து மந்திரம். அவன் வீற் றிருக்கும் படைவீடுகள் ஆறு. அவன் சூரபன்ம னுடன் போர்செய்த நாட்கள் ஆறு. கந்த சஷ்டி விழாவாகவும், விரதமாகவும் கொண்டாடப்படு வது ஆறு நாட்கள் ஆகும்.

8. விழா பவனம் (தூய்மை பெறுதல்) வகையைச் சார்ந்தது.

9. தம் வழிபாட்டில் வேள்வித் தீயில் மருத்துவ குணமுடைய சுள்ளிகளைப் போடுவதால் வேள்விப்புகை உடலுக்கு நன்மை தரும். நவ தானியங்களைப் போடுவது நவக்கிரகங்களால் துன்பம் வராமல் காக்கும்.

10. பிம்ப வழிபாடு மனதை ஒரு முகப்படுத்த உதவும்.

11. கும்ப வழிபாடு ஐவகை மலங்களைப் போக்கும்.

12. விழா சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

13. விரதம் ஆன்மீக ஈடேற்றத்திற்கும், வாழ்வு வளம் பெறவும் உதவும்.

14. முருகப் பெருமானை வழிபடுவதால் ஆறுசமயக் கடவுள் வழிபாட்டின் பலன்களைப் பெறலாம். விழா நடத்துவோரும், விரதமிருப்போரும் அடையும் நன்மைகள் அளப்பரியனவாகும்.

★★★

# பழனி மலையைச் சாரேனோ சாமி அழகைப் பாரேனோ!

- பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்
மதிப்பியல் பேராசிரியர், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு

(முன் தொடர்ச்சி)

முருகனிடம் பக்தி கொண்ட நாம் அவனைப் பாடிப் பரவுவது எப்படி? சூரபதுமன் அகந்தை மிகுதியால் முருகனைப் பழித்துக் கூறியது வீரவாகு தேவர் உரையாடல் மூலம் இனிக் காண்போம்.

தூது சென்ற வீரவாகு தேவரிடம் சூரபதுமன் பேசுகிறான்; மகேந்திர காண்டத்தில் நாம் இதைக் காண்கிறோம்:

''ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்று தனி அரசாக விளங்கும் எனக்கு, இன்னமும் பல் முளைக்காத பாலகனோ புத்திமதி சொல்பவன்? தேவர்கள் எமது அசுரகுலத்தை ஒடுக்கி ஏழைகளாக ஆக்கிவிட்டனர். ஆகையால் அந்தத் தேவர்களுடைய செல்வங்களை எல்லாம் கெடுத்து, எங்களுக்குக் குற்றேவல் செய்ய வைத்தேன். இவ்வாறு என் அசுர குலத்திற்கு நீதியே செய்தேன். முன்னே எனக்குத் தப்பியோடிய இந்திரன் முதலானவர்களை இங்கே கொண்டு வந்து சிறையிலடைக்க எண்ணியுள்ளேன். என் தம்பி தாரகனைக் கிரவுஞ்ச மலையோடும் வேலால் அப்பாலகன் அழித்த செய்தியை நான் நேற்றே அறிந்தேன். அச்சிறுவன்மேல், போர் தொடுக்க நாளையே சிலரை அனுப்பி என் பழியையும் போக்கி விடுகின்றேன்; பார். பல பேசிப் பயனில்லை. தேவர்களை விடுதலை செய்யேன். நீ அறிவிலியாதலால் அறிவற்ற ஒரு குழந்தையின் சொல் கேட்டு ஒற்றனாய் வந்தாய். இப்போதே நீ பிழைத்துப் போவாயாக. உன் உயிரை உனக்குத் தந்தேன்'' என்று இகழ்ந்து கூறினான்.


சூரபதுமன் தேவர்களைச் சிறை வைக்கவே, சிவகுமாரனான முருகப் பெருமான் தென்கோடியிலுள்ள திருச்செந்தூர் என்னுமிடத்தில் தன் படைகளோடு வந்து தங்கினான். அங்கிருந்து கொண்டே வீரவாகு தேவரைச் சூரனிடம் தூதனுப்பினான். வீரவாகு தேவர் முருகப்பிரான் கட்டளைப்படி சூரனுடைய தலைநகரான வீரமகேந்திரபுரம் சென்று சந்தித்த வரலாறே இந்த நிகழ்ச்சி.

பாலமுருகனை இகழ்ந்து பேசினான் சூரபதுமன். அவனுக்குப் பின்வருமாறு பதிலுரைத்தார் வீரவாகு. ''அறிவற்ற சூரனே! ஒரு பறவை ஒளி பொருந்திய சிறிய நெருப்புத் துண்டை அறியாமையால் மின்மினிப் பூச்சி என்று எண்ணித் தன் கூட்டினில் கொண்டுபோய் வைத்ததால் கூட்டோடு எரிந்து அழிந்து போயிற்று. இந்தக் கதையைப் போல் பற்பல தேவர்களையும் அவர்கள் ஐயோ என்று அலறும்படி இந்த மகேந்திரபுரியில் கொண்டு வந்து சிறை வைத்த நீ முருகனின் கோபத்தால் அழியப்போவது திண்ணம். பாலமுருகன் அறிவிலியல்லன். நீ தான் அறிவற்றவன்.

''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு'' என்பது பொய்யாகுமோ? சூரன் இழைத்த தீமை இன்னது என்பதைக் குறித்து உணர்த்தும் பொருட்டு அமரரைச் சிறை செய்தது பிழை என்பதைச் சுட்டிக்காட்டியும் அந்த அறிவிலியின் மனத்தில் மாற்றம் பிறக்கவில்லை. இத்தீமையின் பயன் மாத்துயர்படல் அன்றி இறப்பும் வரும், ''சாதலின் இன்னாதது இல்லை'' என்கிறார் திருவள்ளுவர். அகந்தையால் சூரன் ஆவி துறந்த கதையே முருகக்கடவுள் நிகழ்த்திக்காட்டிய சூரபதுமன் வதையாகும்.

சூரபதுமன் - வீரவாகு தேவர் உரையாடல், நீதியை நிலைநாட்ட எக்காலத்தும் பொருந்தும் என்பதை மறுக்க முடியுமா? மிகுந்த வீரமும் செல்வமும் வலிமையும் நிரம்பப் பெற்றவர்களாயிருப்பினும் அவர்கள் எவரிடமேனும் வீணாகப் பகைமையுடையவராய் வாழ்ந்தால் அந்த வாழ்வு குற்றமுடையதேயாகும். நன்றாகாது என்பதே இந்த உரையாடலின் முக்கிய கருத்து. இத்தகையோருக்கு அழிவு நிச்சயம் என்று விதித்திருப்பது இறைவன் விதி.

'நல்லவை நாடி இனிய சொலின், அல்லவை தேய அறம் பெருகும்' என்கிறார் தெய்வப்புலவர். சினத்தைப் பொருள் என்று கொண்டவன் தரையின் மேல் அறைந்தபோது கையானது தாக்கப்பட்டுத்



துன்புறுவது போலக் கேடு அடைவான். கோபம் தன்னைக் கொண்டவனைத் தப்பாமல் கெடுக்கும். கையால் தரையின் மீது அடித்தால், தரை கேட்டை யாது. ஆனால் அறைந்தவுடன் கைதான் நோவடை யும். அப்படியே ஒருவன் தன் கோபத்தால் - வல் லமையால் பிறரைக் கொடுக்க முயல்வானாயின் பிறர் ஏதும் செய்ய வேண்டாமல் அந்தக் கோபமே தன்னையுடையவனைக் கெடுத்துவிடும். குற்றமற்ற தேவர்களைச் சிறைபடுத்தித் துன்புறுத்திய சூரபதும னுக்கு அவனுடைய பழிதீர்க்கும் கோப உணர்வே அழிவைத் தந்தது என்பதற்கு ஏற்ற குறள் விளக்கத் தைத் தெய்வப்புலவர் இனிதே அளித்துள்ளார்.

''வேலுண்டு வினையில்லை, மயிலுண்டு பயமில்லை'' என்ற ஆன்றோர் வாக்கு பொய்யா குமோ? சூரபதுமன் அகங்காரத்தின் காரணமாகத் தேவர்களைச் சிறைப் பிடித்தான். இந்திரனின் மக னையும், இன்னும் பல விண்ணோர்களையும் படாத பாடு படுத்தினான். அடாத செயல்கள் பல செய்யச் சொன்னான். அரக்கர்களுடன் மீன் சுமந்து செல்வது தான் தேவர்கள் வேலை. இந்த வேலையில் இருந்து விடுபட வேலைப் பணிந்தார்கள் தேவர்கள். வேல் அவர்களை விடுவித்தது. விடுதலை தேடிக் கொடுத்தது. வெல் என்ற சொல்லில் இருந்து, வேல் என்ற சொல் பிறந்தது. வெல் என்றால் வெல்லுதல் என்று பொருள். வினையை வெல்லுதலே வேலின் வேலை. தேவர் களைச் சிறைமீட்ட வேல் நம் குறையையும் தீர்க் காதோ?

முருகன் கைவேல் முன்வினை தீர்க்கும் வேல். 'முந்தை வினையே வராமற் போக' என்று பாடுகிறார் அருணகிரி அடிகள். வெற்றிவேலைப் போற்றுகிறார் நக்கீரர்.

''வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி,
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை'' என்கிறார்.

முருகன் தமிழ்க் கடவுள். தமிழகம் கடந்து நம்மையடுத்துள்ள இலங்கையில் முழுமுதற் கடவுளா கிய முருகப் பெருமானுக்கு, கதிர்வேலாயுத சுவாமிக்கு, கதிர் காமத்தில் மாபெரும் கோயில் உள்ளது. ஒவ் வோர் ஆண்டும் ஆடிப்பௌர்ணமிக்கு 'வேல் திரு விழா' துவங்கிவிடும். இந்த வேல் விழா இலங்கையில் தேசியத் திருவிழாவாக நடைபெறுகிறது. சைவ சமயத் தினர் மட்டுமல்லாமல் வேறு பல சமயத்தினரும், ஈசன் திருக்கோலத்தைப் பக்தியுடன் கண்டு கசிந்துருகி, நெஞ் சாரத் தொழுது காணிக்கையும் செலுத்துகின்றனர். கதிர்காமத் திருத்தலம் செல்லும் வழியில் காட்டு விலங்குகள் குறுக்கிடுவதுண்டு. ஆனால் 'அரோகரா' என்ற தெய்வ முழக்கம் கேட்டவுடன் அவை தாமே விலகிச் சென்றுவிடும்.

விதிமுறைகளைக் கடைபிடிக்க இயலாத சூழ்நிலையில் பக்தி உணர்வு பெருக, மன்னிக்கும் தன்மை தண்டாயுதபாணிக்கு உண்டு என்பதால் முருகன் கோயிலை அயல்நாடுகளில் லண்டன், வட அமெரிக்கா ஆகிய இடங்களிலும் கட்டி முடித்து வழி படுவது பெருகி வருகின்றது. தாங்கள் செய்யக்கூடிய சிறு தவறுகளை மறந்து, மன்னித்துத் தங்களை வாழவைக்க வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு கோயில் கட்ட இயலாத சிறு ஊர்களில்கூட தண்ட பாணி படத்தை வைத்து வழிபடுவது வழக்கமாகி விட்டது.

கல்கத்தாவில் வங்காளி ஒருவர் தமிழ்க்கட வுள் முருகனிடம் பக்தி கொண்டு, தமிழ் பயின்று தம் பெயரையே 'நன்னெறி முருகன்' என்று மாற் றிக்கொண்டார். அவர் இயற்பெயர் சூநீத்குமார் சட்டர்ஜி.

அடுத்து, மலேசியா, சிங்கப்பூரை எடுத்துக் கொண்டால் அங்கும் முருகபக்தி 150 ஆண்டுகளுக்கு முன்பே வளர்ந்திருப்பதைக் காண்கிறோம். சிங்கப் பூர் தைப்பூசத் திருவிழாவைப் பற்றி அறிஞர் ரோலாண்டு பிராடல் தம் நூலில் சிறப்பாக எழுதி யிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா ஆகிய இடங்களிலுள்ள முருகன் கோயில் திருவிழாக்கள் முருக பக்தியை அந்நாடு களில் பெருக்கி வருகின்றது.

ஈப்போவில் வைகாசி விசாகத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. விசாகத்தன்று வேலன் தேர்ஏறி உலா வருவான். ஆங்கிலேயர் களும் இந்தக் கோயிலுக்கு வருகை தந்து விழா வைச் சிறப்பிக்கின்றனர்.

சைவச் சின்னங்களில் திருநீறு மிகச் சிறப் புடையது. 'நீறில்லா நெற்றிபாழ்' என்பது முதுமொழி. முருகன் விரும்புவது விபூதி என்னும் திருநீறே. விபூதி சில தத்துவக் கருத்துகளை நினைவூட்டு கிறது. வெண்மை சுத்தத்திற்கு அடையாளம். விபூதி யைப் போல் நம் உள்ளம் சுத்தமாக இருக்கவேண் டும். முருகன் விரும்புவதும் தூய இதயத்தைத்தான்.

''முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்'' என்னும் திருவாக்காலும் தமிழுக் கும் முருகனுக்கும் உள்ள இயைபு நன்கு விளங்கு கிறது. ''தமிழ்மொழி பேசும் அன்பர்களே, உங்களுக் கும் முருகனுக்கும் உள்ள தொடர்பை உணருங் கள். உங்கள் மொழியின் மாண்பை உணருங்கள். இவ்வினிய மொழியால் முருகனைப் பாட்டால் பாடி மகிழ எழுங்கள். இயற்கையில் முருகன் தமிழாய்ப் பொலிவதை பாருங்கள். இன்பம் நுகருங்கள்'' என் கிறார் திரு.வி.க. இதனை உணர்ந்தே கடல்கடந்து வாழும் தமிழர்கள் தமிழ்க் கடவுளை வணங்குகிறார் கள். ஆங்காங்கே முருக வழிபாடு நடத்தி முருகனின் பெருமையை வளர்க்கிறார்கள். எடுத்துக்காட்டாக, பினாங்கில் 1857 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள தண்ணீர் மலை ஆண்டவர் தைப்பூச விழாவை எடுத்துக் கூறலாம்.

போரின் மறுபெயர் வியட்நாம் எனலாம். அமைதிக்குப் பஞ்சமான அந்த இடத்திலும் சைகோ னில் தண்டாயுதபாணி வழிபாடு இன்றும் சிறப் பாக நடந்து வருகின்றது.

சஷ்டி எனும் நாளில் கந்த சஷ்டி விரதத்தை மேற்கொள்கிறோம். மனம், மொழி மெய்களால் தூய்மை பெற்று கந்த சஷ்டிப் பாராயணம் செய் தால் அதுவே மனக்குறையைத் தீர்க்க ஏற்ற மருந் தாகும். பகைவர்களும் வந்து அடிபணிந்து வணங்கு வார்கள். இத்தத்துவத்தை உணர்ந்தே கந்த சஷ்டி பாரா யணம் உலகெங்கும் பரவியுள்ளது. முருகனுக்குக் குகன் என்று ஒரு பெயருண்டு. குகையில் இருப்பவன் என்பது பொருள். இதயத்தினூடே உள்ள சிறு வெளிக் குக் குகையென்று பெயருண்டு. அங்கேயிருப்பதால், முருகனுக்குக் குகன் என்றும் பெயர் அமைந்தது. குறிஞ்சி நிலத்தில் வாழும் வேடர்கள் தம் குலதெய்வ மாகிய முருகனை வழிபட்டு அவன்பெயரை வைத் துக் கொள்வார்கள். இராமாயணத்தில் வரும் குகன் வேடர் தலைவனாதலின் முருகனைக் கந்தவேள் என் கிறோம். வேள் என்பது முருகனுக்கும், காமனுக்கும் பொதுவான பெயர். ஐயமின்றித் தெரிந்துகொள்ள, காமவேள், கந்தவேள், முருகவேள் என்று பிரித்துச் சொல்வது மரபு. ''வேலை வணங்குவதெனக்கு வேலை'' என்பது செவ்வந்திப் புராணம், இறைவனுடைய ஆயுதங்களால் இறைவனை ஏற்றமுறச்செய்து வழி படுவது ஒரு மரபு. வேலையே முருகனாகக் கொண்டு வழிபடும் முறையை யாழ்ப்பாணத்தில் நல்லூர், உரும்பராய் முதலிய இடங்களில் காணலாம். பழங் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வேற்கோட்டம் என்ற கோயில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

அகந்தையை அகற்றுவதில் முருகனுக்கு இணை அவன்தான். ஔவைக்கும் தம் புலமை யால் அகந்தை ஏற்பட்டுள்ளதை சுட்டிக் காட்டவே, சுட்ட பழம், சுடாதபழம் நிகழ்ச்சியை நிகழ்த்திக் காட்டினார். அத்துடன் மட்டுமா அவனியில் அரிது அரிது என்பது எது? எனக் கேள்வி கேட்டு விளக்கம் கூறவைத்து, உண்மையை ஔவை வாய் மூலம் உலகுக்கு உணர்த்திய பெருமை முருகனையே சாரும்.

தமிழ்க் கடவுளாகிய முருகன் தமிழர் தத்துவத்தினை ஔவைப் பிராட்டியின் மூலம் தெரி விக்கிறார். சிறப்பான வாழ்க்கை வேண்டுமெனில்

குற்றமற்ற மனிதப் பிறவி வேண்டும். அதிலும் தான மும் தவமும் செய்தல் வேண்டும். அதுதான் அரிதி னும் அரிதாகும் எனக் குறிப்பிடுகின்றார். அதனையே வள்ளுவர்,

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு'' எனக் கூறுகிறார்.

தமிழிலே பாடப்பெற்ற தத்துவநூல்களும் சகோதர மனப்பான்மை கொண்டிருப்பது மட்டுமல் லாது அன்பருக்கும் பணி செய்ய வேண்டும், அதுவே இன்பம் பயக்கும் எனக் கூறுகின்றன. தாயுமானவ ரும் அதையே கூறுகின்றார். என்னே சமத்துவக் கொள்கை!

மீண்டும் வள்ளியை மணந்த திருத்தணிக்கு வருவோம்.

''முத்தியின் முதல்வ போற்றி
மூவிரு முகத்த போற்றி
சக்திவேல் கரத்த போற்றி
சங்கரி புதல்வ போற்றி
சித்திதந் தருள்வாய் போற்றி
சிகாமணி போற்றி போற்றி
பக்தியின் விளைந்த இன்பப்
பரம்பர போற்றி போற்றி''

என்கிறார் அருட்பிரகாச வள்ளலார். வேடர் தலைவ னான நம்பிராசனின் வளர்ப்புப் பெண் வள்ளியை மணந்துகொள்ள வேலன் வேடனாக உருமாறிப் புள்ளி மானைத் தேடுவதுபோல் வள்ளிமானைத் தேடி வந் தான். வேல் முருகன் வெண்தாடிக் கிழவனாக வேட மிட்டு வந்து அண்ணன் ஆனைமுகனைத் துதித்து அவன் துணையுடன் வள்ளியை மணந்த திருத்தலம் தான் திருத்தணிகை. திருத்தணிமுருகனின் திருவடி வணங்கி அவன் திருவுளம் மகிழத் திருப்புகழ் பாடி, வினைகளைய விழியில் நீர் பெருக்கி நெஞ்சுருக வணங்குவோம். நினைத்ததை முடித்தருளுவான் வெற்றி வடிவேலன்.

பழனியில் கோவணத்துடன் எழுந்தருளிய இறைவன் யாவருக்கும் உணர்த்துவது நிலையாமை. ஆனால், அப்பனுக்கு போதித்த அவன், ஒருவன் ஞானம் கொள்ளுவானேயானால், நிலைக்கும் இறை யருளை பெற இயலும் என்பதையும் கூறுகிறார். அதனை வலியுறுத்தும் வகையாக தான் கொண்ட வேல் மூலம் உணர்த்துகிறார். வேல்தண்டு போலும், ஒருவனது சாதாரண அறிவு, இந்த அறிவு மேலும் மேலும் உயரப் பரந்து விரிந்தால், வேல்முனை போல் அறிவு கூர்மையை உணர முடியும். எல்லாம்வல்ல இறைவனான முருகன் ஒரு மனிதனின் கூர்மையான அறிவுதான் அவனை வாழ்விக்கும் என்பதை உணர்த் தும் வகையாக கோவணத்துடன் வேல்கொண்டு பிரகாசமாக காட்சியளிக்கின்றார்.

நக்கீரர் பழநியில் தான் முனிவர்கள் பலர் இருந்து வழிபட்டதையும் அவர்கள் உடம்பும் உள்ள மும் உணர்வும் எப்படிப்பட்டன என்ற விளக்கத்தை யும் 18 வரிகளில் புகழ்கிறார். அவர்கள், ''நோயின்றி இயன்ற யாக்கையர்'' என்று கடைசியாக கூறியதன் மூலம் மருத்துவச் சிறப்புடன் பழநியிலிருக்கும் சித்தர் பெருமை புலனாகிறது.

பழநி முருகன் ஒரு மருத்துவன். பழநியாண்டி யின் திருமேனியே மருந்து; அதிலும் அக்கிரி வீதி களில் வலம் வருவதும் ஓர் அரிய மருத்துவப் பய னாகும். சித்தர்கள் பயிர் செய்த மூலிகைகள் பல இன் றும் மலை மீது இருக்கின்றன. அவற்றின் காற்றே மருந்தின் பயனாகும். கொடைக்கானல் காற்றும் மருந்துக் காற்றேயாகும்.

முருகன் அறிவுக்கடல், கருணை வெள்ளம், அன்பின் இருப்பிடம், பண்பின் வெளிப்படை - பிறவிப் பிணி நீக்கும் மருத்துவனும் அவனே ஆவான்.

''ஆறுமோ ஆவல், ஆறுமுகனை நேரில்
காணாமல்....?''

★★★

## பழநியில் ஓர் நாள் பூசை செய்தலின் பலன்

''கந்தனின் பூசை ஓர்நாள்
கடிநகர் இதனில் ஆற்றில்
இந்தமா ஞாலம் ஆதி
புவனங்கள் தொறும் எஞ்ஞான்றும்
வந்தனை புரியில் உண்டாம்
பலன் எய்தும் மனம் ஒன்றிங்ஙன்
சிந்தனை புரியில் ஓரேழ்
கோடியும் சித்தி ஆமால்''

# பெரிய புராணத்தில் வரலாற்றுச் சிறப்பு

- ''கலைமாமணி'' கவிஞர் கே.பி. அறிவானந்தம்

பெரியபுராணம் காட்டும் வரலாற்று நிகழ்ச்சிகளை நமது சான்றோர் பெருமக்கள் எண்ணற்ற முறைகளில் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அவற்றுள் சிலவற்றை இங்கு நாம் காண்போம்.

தில்லை மூவாயிரவர் என்ற எண்ணிக்கை மிகவும் பிரசித்தமானது. இதனை வரலாற்று உணர்வு கொண்ட சேக்கிழார்பெருமான் சிறப்பாகப் பதிவு செய்கிறார்.

செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வவே
தியர்களானார்
மும்மை ஆயிரவர் தாங்கள் போற்றி முதல்வனாரை
இம்மையே பெற்று வாழ்வார் இனிப்பெறும்
பேறொன்றில்லார்
தம்மையே தமக்கொப்பான நிலைமையார்
தலைமை சார்ந்தார்

இதற்குத் தமது திருத்தொண்டத்தொகை மூலம் புராணம் பாட சேக்கிழாருக்கு வழியமைத்த சுந்தர மூர்த்தி சுவாமிகள் ''முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தியெனப்பட்டானை'' என வழிகாட்டுகிறார்.

இது கூடப் பெரிதல்ல; வைணவ அடியாரான குலசேகராழ்வார் ''தில்லைநகர் சித்ரகூடந்தன்னுள், அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த'' என்று தமது பாடலில் இதனை உறுதி செய்கிறார்.

திருயேகம்பபுரத்து ராஜமல்ல சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த திரைராஜ்ய கடிகா மத்தியஸ்தன் மூவாயிரவன் என்ற ஒருவன் அபிஷேகாதிகளுக்காகப் பொன்தானம் தந்ததாகக் கல்வெட்டு உள்ளது. விருத்தாசலம் தாலுகா பெண்ணாகடத்தில் பிரளயகாலேஸ்வரர் ஆலயத்தில் மூவாயிரவன் கோல் என்று நீட்டலளவை பற்றிய குறிப்பு உள்ளது. இவற்றால் மூவாயிரவர் புகழ் தெரிகிறது. சேக்கிழாரின் வரலாற்று நோக்கை இவை உறுதிப்படுத்துகின்றன.

ஏனாதிநாத நாயனார் என்றே ஒரு நாயனார் பெயர் வழங்குகிறது. இந்தப் பெயரே வரலாற்று நோக்குடையது.

ஏனாதி என்பது மன்னர்களின் படைத்தலைவர்களாக விளங்கியவர்களுக்குத் தரப்பட்ட பட்டப் பெயராகும். ஏனாதி, எட்டி, காவிதி ஆகியவை இப்படித் தரப்பட்ட பட்டப்பெயர்களென தொல்காப்பியம் கூறுகிறது. இதற்கு அடையாளமாக நெற்றியிலணியும் ஏனாதித் தங்கப்பட்டமும், விரலுக்கு ஏனாதி மோதிரமும் மன்னர்களால் தரப்பட்டன. புறநானூறு மணிமேகலை சிந்தாமணி ஆகிய நூல்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஏனாதிநாத நாயனார் படைத்தொழிலில் சிறப்புற்று விளங்கினார் என்பதையும், அதனைப் பயிற்றுவித்ததன் மூலம் பெற்ற பொருளைக் கொண்டு அடியவர்க்குத் தொண்டுபுரிந்தார் என்பதையும் சேக்கிழார் பெருமான் தமது பாடலின் மூலம் நமக்குக் கூறுகிறார்.

வாளின் படைபயிற்றி வந்த வளமெல்லாம்
நாளும் பெருவிருப்பில் நண்ணும் கடப்பாட்டில்
தாளும் தடமுடியும் காணாதார் தம்மையும்
தொண்டு
ஆளும் பெருமான் அடித்தொண்டர்க்கு ஆக்குவார்.

சாக்கியநாயனார் இறைவனைக் கல்லெறிந்து வழிபட்டார் என்பது நமக்குத் தெரியும். இறைவன் அவர் அப்படிக் கல்லெறிந்ததையும் கண்ணப்பர் செருப்புக் காலால் தன்னை மிதித்ததையும் அன்பின் அடையாளமாக ஏற்றுக்கொண்டதுபோல் பூசனையாகவே கருதினார் என்பதையும், அது கல்தான் என்றாலும் அரனார்க்கு அது மலராகவே இருந்தது என்பதையும் சேக்கிழார் பெருமான் சுவையாகப் பாடுகிறார்.

கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியும் திருமுடியின் மேவிற்றால்
நல்லார்மற் றவர்செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பார் அரனார்க்கஃது
அலராமால்

சாக்கியநாயனார் இப்படிக் கல்லெறிந்து வழிபட்டதற்கு வரலாற்று நீதியான ஒரு காரணம் உண்டு. இமயத்திற்கு வடக்கே இருக்கும் திபெத்திய நாட்டில் வாழும் பௌத்தர்கள், புத்ததேவனை வழிபடும்போது ஒவ்வொரு மந்திரத்தின் இறுதியிலும் ஒரு கல்லை எறிந்து வழிபடுவார்கள். காரணம் பனிமிகுந்த அந்த நாட்டில் மலர்கள் கிடையாது.

இதன் அடிப்படையிலேயே பௌத்தத்தை சார்ந்திருந்து சைவத்தை ஏற்ற சாக்கியநாயனார், கல்லெறிந்து வழிபட்டார் என்று கருத இடமுண்டு.

பல்லவர் காலத்தில் நாகப்பட்டினம் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது. அதிபத்த நாயனார் புராணத்தில் சேக்கிழார் பெருமான் அதைப்பற்றி

அற்புதமாகப் பாடுகிறார். துறைமுகத்திற்கு வந்த கலங்களில் வந்த பொருள்கள் கடலினும் பெரிதாக யிருந்தது என்கிறார்.

பெருமை யிற்செறி பேரொலி பிறங்கலின் நிறைந்து
திருமகட்குவாழ் சேர்விட மாதலின் யாவும்
தருதலில்கடல் தன்னிலும் பெரிதெனத் திரைபோல்
கரிப ரித்தொகை மணிதுகில் சொரிவதாங்
கலத்தால்

இப்படி நாகைத் துறைமுகம் சிறப்புற்று விளங்கியதைப் பற்றி சீனர்கள் எழுதிவைத்த குறிப்புகள் தெரிவிக்கின்றன. இராசசிம்மப் பல்லவன் (கி.பி. 685-720) சீன வணிகர்களுக்காக நாகையில் பௌத்த விஹாரம் ஒன்றைக் கட்டிச் சீன அரசனைப் பெருமைப் படுத்தினான். சீன அரசனும் பல்லவனைப் பெருமைப் படுத்தும் வகையில் பல பரிசுகளை அனுப்பி வைத்தான் என்று சீனவரலாறு கூறுகிறது.

பரதவர் மரபில் நம்பியான் குடியில் அவதரித்தவர் அதிபத்தநாயனார். ஒவ்வொரு நாளும் தான் பிடித்த மீன்களில் ஒன்றை இறைவனுக்கெனக் கடலில் அர்ப்பணித்தார் என்பதும், தினம் ஒரு மீனே கிடைத்தபோதும் அவ்விதமே செய்தார் என்பதும், ஒருநாள் பொன்மயமான நவமணிமீன் கிடைத்த போது அதனையும் கடலில் விட்டு முத்தியடைந்தார் என்பதும் சேக்கிழார் காட்டும் புராண வரலாறாகும்.

அந்த வரலாற்றின் அடிப்படையில் அதிபத்த நாயனார் திருநாள் நம்பியான் குப்பத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இம்மரபினரில் யாராவது இறந்துவிட்டால் அவர் உடலைத் திருக்கோயிலின் முன்பு கொண்டுவந்து வைத்து பரிவட்டம், மாலை முதலானவை அணிவித்து எடுத்துச் செல்லும் வழக்கம் இன்றும் இருக்கிறது.

நாகப்பட்டினம் போலவே மயிலாப்பூரும் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியிருக்கிறது. சேக்கிழார் பெருமானின் ஒரே ஒரு வரிகூட இதற்கான வரலாற்று ஆய்வை மேற்கொள்ளச் செய்கிறது.

திருஞானசம்பந்தர் வரலாற்றில் பூம்பாவையை எழுப்பிய வரலாறு மிகவும் பிரசித்தமானது. திருஞானசம்பந்தர் திருவொற்றியூரில் வந்து தங்கியிருப்பதை அறிந்த சிவநேசர், திருவொற்றியூரிலிருந்து திருமயிலாப்பூர்வரை நடைப்பந்தர் இடுவித்து, தூயஉடை விதானித்து, மகர தோரணங்கள் கட்டி அலங்காரம் செய்தார். ஆளுடையபிள்ளையார் மயிலாப்பூருக்கு எழுந்தருளினார்.

இந்த வரலாற்றைப் பாடும் சேக்கிழார் பெருமான் இவ்விதம் குறிப்பிடுகிறார்.

காழி நாடரும் கதிர்மணிச் சிவிகை நின்றிழிந்து
சூழி ரும்பெரும் தொண்டர்முன் தொழுதெழுந்தருளி
வாழி மாதவர் வணிகர்செய் திறம்சொ லக்கேட்டே
ஆழி சூழ்ம யி'லாபுரித் திருநக ரணைந்தார்

இதில் ''ஆழிசூழ் மயிலாபுரி'' என்ற சொற்கள் மயிலை கடற்கரைப் பட்டினமாக இருந்ததைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அருணகிரிநாதரும் இதனை உறுதிப்படுத்தும் விதத்தில்

கடலக் கரைதிரை அருகேசூழ்
மயிலைப் பதிதனில் உறைவோனே

என்று பாடுகிறார். ஆக பழைய கபாலீச்சரர் கோயில் கடற்கரையில் இருந்திருக்கிறது. வணிகருள் மேம்பட்டிருந்த சிவநேசர் திருமனையும் கடற்கரையில் இருந்திருக்க வேண்டுமென அறியப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் டாலமி (Ptolemy) என்ற கிரேக்க ஆசிரியர் இயற்றிய பூகோள நூலில் மல்லிஆர்பா (Malliarpha) எனப்படுவதே மயிலாப்பூர் என்று Vestiges of Old Madras Vol. 1 Chapter 23-ல் ஆசிரியர் H.D. Love கூறுகிறார். 11-வது நூற்றாண்டின் கல்வெட்டு ''மயிலார்ப்பில் பல நானா தேசிகள் கூடிச் சில தீர்மானங்கள் செய்தனர்'' என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து டாலமி காலம் முதல் கல்வெட்டின் காலம் வரை மயிலாப்பூர் துறைமுகப்பட்டினமாக இருந்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

மயிலைவாசிகளான பல வணிகர்கள் பல்வேறு தானங்கள் செய்த வரலாறுகளைக் கல்வெட்டுகள் பதிவு செய்திருக்கின்றன. கடல் வாணிபத்தால் செழுமை பெற்றிருந்த அத்தகைய வணிகர்களுள் தலையானவராக சிவநேசர் இருந்ததால்தான் ஞான சம்பந்தருக்கு அத்தகைய வரவேற்பைத் தர இயன்றது என்பது வரலாற்று ரீதியாக ஏற்கத்தக்கதேயாகும்.

பாடல்களில் மயிலாப்பூர் மயிலாப்பு என்ற பெயராலேயே குறிப்பிடப்பட்டு வந்தது. கல்வெட்டுகளிலும் மயிலாப்பில் என்றும், பின்னர் சிறிது மாறி மயிலார்ப்பில் என்றும் செதுக்கப்பட்டுள்ளன.

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்

என்று ஞானசம்பந்தர் பாடுவதில் உள்ள மயிலைக் கட்டு என்பது மயிலார்ப்பு என்னும் பொருள் தருவதேயாகும். பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் மயிலை, மயிலாப்பூர் என்றே குறிப்பிடுவதிலிருந்து அவர் காலத்திற்குள் மயிலாப்பு என்பது மயிலாப்பூர் என மருவி வந்துவிட்டது என்பது தெரிகிறது.

இப்படி சேக்கிழார் பெருமானின் ஒவ்வொரு சொல்லும் வரலாற்று உண்மையின் அடித்தளமாக விளங்குகிறது என்பதைப் பார்க்கிறோம்.

# திருக்கோயில் வழிபாடே துன்பங்கள் தவிர்க்க வழி

- ''திருத்தொண்டர் உரைமாமணி'' சிவத்திரு த. ஆறுமுகம்

திருஞானசம்பந்தர் சைவசமயத் தலைவர். உலக சமயத்தலைவர்களில் தலைசிறந்தவர். இறைவனால் உலகுக்கு அனுப்பப்பட்ட அருளாளர். தமிழ் நாடு முழுவதும் திருப்பயணம் மேற்கொண்டு தெய்வ நெறியைப் பரப்பியவர். 4000 பாடல்களை நமக்குத் தோத்திரங்களாக அளித்தவர்.

ஒருவருடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்று யாராலும் உறுதியாகச் சொல்ல முடியாது. பெரும் பாலாருடைய வாழ்க்கையின் பிற்பகுதி துன்பம் நிறைந்ததாக அமைந்து விட்டதை நேரில் பார்த்தும், பலர் சொல்லக்கேட்டும் வருந்திய திருஞான சம்பந்தர் துன்பங்கள் இல்லாத எதிர்காலம் அமைய, இறைவன் வழிபாடு - திருக்கோவில் வழிபாடுதான் தீர்வு என்று ஒரு பதிகத்தில் அறிவுறுத்தி உள்ளார். அவர் அறிவுரைகளைக் கடைப்பிடித்து நாமும் எதிர்காலத் துன்பங்களைத் தவிர்த்துக் கொள்வோமாக!

நம்பொருள் நம்மக்கள் என்று நச்சி இச்சை செய்து நீர்<br>
அம்பரம் அடைந்து சால அல்லல் உய்ப்பதன் முனம்<br>
உம்பர் நாதன் உத்தமன் ஒளிமிகுந்த செஞ்சடை<br>
நம்பன் மேவு நன்னகர் நலங்கொள் காழி சேர்மினே

விளக்கம் : நம்முடைய சொத்து, நம்முடைய மக்கள் என்று அவற்றிலேயே விருப்பமும், பற்றும் வைத்து, (தெய்வ நாட்டம் இல்லாமல்) இறந்த பின் சொர்க்கம் அல்லது நரகம் அடைந்து துன்பப்படுவீர்கள். அதற்கு முன் தேவர்க்கெல்லாம் தேவர், உத்தமர், ஒளிமிக்க சிவந்த சடை உடையவர், நம் நம்பிக்கைக்குரியவரான சிவபெருமான் கோவில் கொண்டுள்ள நல்லநகரம் நன்மைகள் நிறைந்த நகரமான சீர்காழியைச் சேர்ந்து விடுங்கள்.

(சொர்க்கத்திலும் துன்பம் என்பது, மறுபடியும் இந்த உலகத்தில் வந்து பிறந்தாக வேண்டும் என்ற நிலை அங்கே இருப்பதால்)

பாவம் மேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்<br>
ஏவமான செய்து சாவதன் முனம் இசைந்து நீர்<br>
தீபமாலை தூபமும் செறிந்தகை யராகிநம்<br>
தேவதேவன் மன்னும் ஊர் திருந்துகாழி சேர்மினே.

விளக்கம் : பாவ எண்ணம் கொண்ட உள்ளத்தோடு பத்தியுமில்லாமல் நாள்தோறும் குற்றங்கள் பல செய்து இறப்பதற்கு முன், தீபம் தூபம் மலர் மாலைகளை நீங்கள் விருப்பத்தோடு கைகள் நிறைய ஏந்தி வழிபடுங்கள். அதற்காக தேவர்க்கெல்லாம் தலைவர், நம் சிவபெருமான் நிலையாக இருந்து நல்வழி காட்டக்கூடிய சீகாழியைச் சேருங்கள்.

சோறுகூறை இன்றியே துவண்டு தூரமாய் நமக்கு<br>
ஏறு சுற்றம் எள்கவே இடுக்கண் உய்ப்பதன் முனம்<br>
ஆறுமோர் சடையினான் ஆதியானை செற்றவன்<br>
நாறுதேன் மலர்பொழில் நலங்கொள்காழி சேர்மினே.

விளக்கம் : உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாமல் நடுங்கித் தூரமாய் விலகிப்போய், உங்கள் நெருங்கிய வசதியுள்ள சுற்றத்தார் ஏளனம் செய்யும்படியான துன்பம் வந்து சேரும் முன்னர், கங்கை ஆற்றைச் சடையில் அடக்கியவர், பிரமனுக்கிருந்த ஐந்து தலைகளுள் ஒன்றைக்கிள்ளி எறிந்தவரான சிவபெருமான் உறைவிடமான மணமும் தேனும் நிறைந்த மலர்ச்சோலைகள் சூழ்ந்த நன்மைகள் மிக்க சீகாழியைச் சேருங்கள்.

நச்சிநீர் பிறன்கடை நடந்து செல்ல நாளையும்<br>
''உச்சிவம்'' எனும் உரை உணர்ந்து கேட்ப தன்முனம்<br>
பிச்சர்நச்சு அரவரைப் பெரியசோதி பேணுவார்<br>
இச்சைசெய்யும் எம்பிரான் எழில்கொள்காழி சேர்மினே.

விளக்கம் : ஒருவர் உமக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பி எதிர்பார்த்து அவர் வீடு சென்று அவர் வாசலில் நிற்கவும் அவர் ''நாளைக்கும் இதே போல் உச்சிப்போதில் வாருங்கள்'' என்று கெடுவைத்து சொல்லுகிற நிலைவரலாம். அப்படி வருவதற்கு முன், எல்லாரையும் கடைத்தேற்ற வேண்டும் என்பதிலேயே பித்துடையவரும், நஞ்சுடைய பாம்பை, இடுப்பைச் சுற்றி அணிந்தவரும், பெரிய சோதிவடிவினரும், பக்தி செய்பவரை விரும்பி ஆட்கொள்ளும் எம்பிரானருமாகிய, சிவபெருமானுடைய அழகு நிறைந்த சீகாழியை அடையுங்கள்.

கண்கள் காண்பு ஒழிந்துமேனி கன்றி ஒன்று அலாதநோய்<br>
உண்கிலாமை செய்து நும்மை உய்த்து அழிப்பதன்முனம்<br>
விண்குலாவு தேவர்உய்ய வேலை நஞ்சு அமுதுசெய்<br>
கண்கள் மூன்று உடைய எம் கருத்தர்காழி சேர்மினே.

விளக்கம் : கண்கள் பார்வை மழுங்கிக் காண முடியாமலும், உடல் வாடித் தளர்ந்து பலநோய்கள் வந்து குடியேறி உணவு கொள்ள முடியாமல் செய்து உங்களை நெருக்கி அழிக்கக்கூடும். அப்படி ஒரு நிலைமை வரும் முன், வானுலகில் மகிழ்ந்து வாழும் தேவர்கள் உய்யும் பொருட்டு, அவர்களை அழிக்கக் கடலில் தோன்றிய விடத்தை அமுதம் போல உட்கொண்டவர், மூன்று கண்களை உடையவர், எம்முடைய எண்ணத்தை விட்டு அகலாத சிவபெருமானுக்குரிய சீகாழியை அடைந்து விடுங்கள்.

அல்லல் வாழ்க்கை உய்ப்பதற்கு அவத்தமே
பிறந்துநீர்
எல்லையில் பிணக்கினில் கிடந்திடாது எழுமினோ
பல்லில் வெண் தலையினில் பலிக்கு இயங்கு
பான்மையான்
கொல்லை ஏறது ஏறுவான் கோலக்காழி
சேர்மினே.

விளக்கம் : அல்லல் நிறைந்த வாழ்க்கையை அனுபவிப்பதற்கே வீணாகப்பிறந்து நீங்கள் எல்லையில்லாத சிக்கல்களில் அகப்பட்டுக் கிடக்காமல், அவற்றிலிருந்து மீளுவதற்கு விழித்தெழுங்கள். பற்கள் இல்லாத வெண்மையான மண்டை ஓட்டை ஏந்திப் பிச்சை ஏற்பதற்காக நடமாடும் தன்மையரும் கொல்லைக்குரிய எருதில் ஏறிவருபவருமான சிவபெருமான் தங்கியுள்ள சீகாழியைச் சேர்ந்துவிடுங்கள்.

பொய்மிகுந்த வாயராய் பொறாமையோடு
சொல்லும் நீர்
ஐமிகுந்த கண்டராய் அடுத்து இரைப்ப தன்முனம்
மைமிகுந்த மேனிவாள் அரக்கனை நெரித்தவன்,
பைமிகுந்த பாம்பு அரைப் பரமர்காழி சேர்மினே.

விளக்கம் : பொய்யை மிகுதியாகப் பேசும் வாயுடையவராய் பொறாமையோடு எதையும் சொல்லுகிறவராகிய நீங்கள் கடைசி நேரத்தில் நெஞ்சில் கோழை கட்டிக் கொண்டு பேசமுடியாமல் மூச்சுத் திணறித் தவிப்பதற்குமுன், கரியநிறமுள்ள உடலுடையவன், வாளாயுதமுடையவன் இராவணனைக் கால்விரலால் நசுக்கியவர், படமுடைய பாம்பை, இடுப்பைச்சூழ அணிந்து கொண்ட உயர்ந்தவரான சிவபெருமானுக்குரிய சீகாழியைச் சேருங்கள்.

காலினோடு கைகளும் தளர்ந்து காம நோய்தனால்
ஏலவார் குழலினார் இகழந்துஉரைப்ப தன்முனம்
மாலினோடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலம்மேவு கண்டனார் நிகழ்ந்தகாழி சேர்மினே

விளக்கம் : காம நோய்க்கு இரையாகிக் கால்களும், கைகளும் தளர்ச்சியடைந்து விட்டதால், மணம் ஊட்டிய நீண்டகூந்தலையுடைய பெண்கள் இகழ்ந்து பேசக்கூடும், அதற்குமுன், திருமாலும் நான்முகனும் தம்மைத்தாமே மதிப்பாக எண்ணிக் கொண்டு விட்டதால், அடிமுடி காண மாட்டாதபடி நின்றவர், நீலநிறம் பொருந்திய கழுத்துடையவரான சிவபெருமான் இருந்து அருள் செய்கின்ற சீகாழியைத் தஞ்சமாக அடைந்து விடுங்கள்.

நிலைவெறுத்த நெஞ்சமோடு நேசமில் புதல்வர்கள்
முலைவெறுத்த பேர்தொடங்கி யேமுனிவ தன்முனம்
தலைபறித்த கையர் தேரர் தாம்தரிப் பரியவன்
சிலைபிடித்து எயில் எய்தான் திருந்துகாழி
சேர்மினே

விளக்கம் : நீண்ட நாள் நோய்வாய்ப் பட்டு கிடப்பதால் உடனிருந்து கவனிப்பதில் சலிப்பும், படிப்படியாக ஊக்கம் குறைந்து, வெறுப்புகொள்ளும் பிள்ளைகளும், பால்குடிப்பதை நிறுத்திவிட்ட சிறிய பேரப்பிள்ளைகளும் வெறுத்து கோபிக்கக்கூடும். அதற்குமுன் தலைமயிரைப் பறித்துக் கொள்ளும் சமணர்களாலும், பௌத்தர்களாலும் சகித்துக் கொள்ள முடியாத புகழை உடையவர், கையில் வில் ஏந்தி முப்புராதிகளின் கோட்டை மதிலை எய்தவருமான சிவபெருமானுக்குரிய நல்வழி காட்டும் சீர்காழியைச் சென்று சேருங்கள்.

தக்கனார் தலையரிந்த சங்கரன் தனது அரை
அக்கினோடு அரவு அசைத்த அந்தி வண்ணன்
காழியை
ஒக்க ஞான சம்பந்தன் உரைத்த பாடல்வல்லவர்
மிக்க இன்பம் எய்தி வீற்று இருந்து வாழ்தல்
மெய்ம்மையே

விளக்கம் : தக்கன் தலையை வீரபத்திரரை அனுப்பி, அரிவித்த சங்கரர் தம் இடுப்பில் சங்குமணி, பாம்புகளைக் கட்டிக் கொண்டவர். மாலை நேரத்து செந்நிறம் போன்ற வடிவுடையவரான சிவபெருமான் கோயில் கொண்டுள்ள சீகாழியைப் பொருத்தமாகப் பாடிய ஞானசம்பந்தர் பாடல்களைக் கற்று அவற்றின்படி நடக்கும் வல்லமை பெற்றவர் மிகுந்த இன்பம் எய்தி செல்வாக்கோடு வாழ்தல் மெய்யாகும். ஐயமில்லை.

குறிப்பு : சீகாழியைச் சேருங்கள் என்று ஒவ்வொரு பாட்டிலும் சொன்னது ஞான சம்பந்தர் சீகாழியை நோக்கிப் பாடியதால். இது எல்லா சிவத் தலங்களுக்கும் பொருந்தும். நாம் சைவசமயத்தில் நிலைத்து, நமக்கு அருகில் இருக்கும் சிவாலயத்தை நாடி வழிபட்டு வந்தால், துன்பம் நீங்கி இன்பம் பெறலாம்.

★★★

# வினாவும் விளக்கமும்

- பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.,

**வினா 29 : விநாயக சதுர்த்தி நாளில் வழிபட்ட பிள்ளையார் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதன் காரணம் என்ன?**

**விளக்கம் :** பொதுவாக, சிலாரூபமான வடிவங்களை அன்றாட வழிபாட்டுக்காக வீடுகளில் வைத்துக் கொள்வதில்லை. மந்திர உபதேசம் பெற்ற சில உபாசகர்கள் மட்டும் வீடுகளில் சிலாமூர்த்தங்களையும், யந்திரங்களையும், வேல் போன்ற சின்னங்களையும் வைத்து வழிபடுவார்கள்.

மற்றவர்கள் திருக்கோயில்களில் ஆகம விதிப்படி நிறுவிய மூர்த்தங்களைத் தரிசித்து மகிழ்வார்கள். வீடுகளில் சுவாமி படங்களைத்தான் வைத்திருப்பது வழக்கம்.

இல்லத்தில் நடைபெறும் சுபநிகழ்ச்சிகள் கணபதி பூஜை செய்து தொடங்குவார்கள். அப்போது சந்தனம், அரிசி, மஞ்சள், வெல்லம் போன்ற பொருட்களால் பிள்ளையார் பிடித்து, தற்காலிகமாக சக்தியை ஆவாகனம் செய்து வழிபடுவார்கள். வழிபாடு முடிந்தவுடன் பிள்ளையார் வடிவத்தில் இருந்த அப்பொருட்கள் பிரசாதமாக மாறிவிடும். அரிசியானால் தலையில் போடவும், சந்தனமானால் நெற்றியில் இட்டுக் கொள்ளவும், வெல்லமானால் உட்கொள்ளவும் பயன்படும்.

''வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி வெல்லப் பிள்ளையாருக்கு நிவேதித்தல்'' என்ற ஒரு பழமொழியும் தோன்றியுள்ளது.

சென்னை போன்ற நகரங்களில் விநாயக சதுர்த்தி வழிபாட்டுக்கான பிள்ளையார் சிலைகளை வியாபாரம் செய்கின்றனர். 'கணபதி தர்ஷன்' என்ற சிறப்புக் கண்காட்சியிலும் அவை விற்கப் படுகின்றன.

ஆனால், கிராமங்களில் மக்கள் தாங்களே பிள்ளையார் மூர்த்தங்களைச் செய்து கொள்கின்றனர். ஆற்றங்கரைக்குச் சென்று நீராடி விட்டு, பிள்ளையார் பிடிப்பதற்கேற்ற களிமண்களையும், புன்னை, நெல்லி, அருகம்புல் போன்ற தழைகளையும் (பத்திரங்கள்) மலர்களையும் எடுத்து வருவார்கள்.

வீடுகளில் பிள்ளையார் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவார்கள். முதியவர்களுக்கும், தனியாக வாழும் பெண்களுக்கும் அண்டை வீட்டார் பிள்ளையார் பிடித்துக் கொடுப்பார்கள்.

விநாயக சதுர்த்திக்கு அடுத்த நாள் காலை 'புனர் பூஜை' என்ற வழிபாட்டை நிறைவு செய்து பிள்ளையாரையும் நிர்மால்யங்களையும் எடுத்துச் சென்று ஆற்றில் போட்டு விடுவார்கள். ஆறு இல்லாத ஊர்களில் ஏரி, குளம், அல்லது கிணற்றில் போட்டு விடுவார்கள்.

வழிபட்ட மூர்த்தம் உரிய மரியாதையுடன் நீர்நிலைகளில் கரைக்கப்படும். கவனக் குறைவினால் அம்மூர்த்தங்களுக்கு 'புனிதக் குறைவு' ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே இந்த வழக்கம் ஏற்பட்டுள்ளது.

கணபதியின் இருப்பிடம் 'மூலாதாரம்' என்பது யோக நூலார் கருத்து. மூலாதாரம் என்ற ஆதாரத்தானம் பஞ்ச பூதங்களில் பிருதிவி என்ற மண் அல்லது பூமிக்கு உரியது. மூலாதாரமாகிய மண்ணிலிருந்து அழைத்து வந்த பிள்ளையாரை மூலாதாரத்திலேயே சேர்த்து விடுகின்றனர். எப்படி? நீர்நிலைகளில் போட்ட மண் பிள்ளையார் கரைந்து அடியிலுள்ள மண்ணில் சேர்ந்து விடுகிறது.

வடமாநிலங்களில் துர்க்கா பூஜையின் போது வழிபட்ட மூர்த்தங்களை அவ்வாறே கடலில் கரைக்கின்றனர்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கணபதி அக்கிரகாரம் என்ற ஊரில் எவரும் வீடுகளில் விநாயக சதுர்த்தி வழிபாடு செய்வதில்லை. ஊரிலுள்ள பிள்ளையார் கோயிலில் ஒன்றுகூடி வழிபாடு நடத்துகின்றனர்.

**வினா 30 : திருஞான சம்பந்தர் சீர்காழி குளக்கரையில் ''அம்மே! அப்பா'' என்று அழைத்து அழுதார். அம்பிகை கீழ்வந்து அழுத பிள்ளையின் கண்ணீரைத் துடைத்துப் பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கொடுத்து அழுகை தீர்த்தாள். ஆனால் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் ''அழுகை தீர்த்து அருள் புரிந்தான்'' என்று ஆண்பால் விகுதியுடன் சிவன் செயலாகக் குறிப்பிடுவது ஏன்?**

**விளக்கம் :**

எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி
''உண்ணடிசில்'' என ஊட்ட உமையம்மை
எதிர்நோக்கும்
கண்மலர் நீர் துடைத்து அருளி, கையில்,
பொற்கிண்ணம் அளித்(து)
அண்ணலை அங்கு அழுகை தீர்த்து அங்கணார்
அருள்புரிந்தார்.

என்பது பெரியபுராணப் பாடல்.

உமையம்மை, அங்கணார் என்று இரண்டு எழுவாய் உள்ளன. 'அருள் புரிந்தார்' என்ற ஒரே பயன்நிலை உள்ளது.

சைவசித்தாந்த நோக்கில் அணுகாவிட்டால் இந்த எளிய பாடலுக்குச் சரியான பொருள் காணுதல் அரிதாகும்.

''அருளது சக்தியாகும் அரன் தனக்கு'' என்பது சிவஞான சித்தியாரில் உள்ள நூற்பா. அதன்படி, சிவபெருமானின் அருளாகவே விளங்குபவள் சக்தி. ஈசனின் அருள் வெளிப்பாடு அம்பிகையின் வழியே நிகழ்கிறது.

சிவனும் சக்தியும் வேறாகத் தோன்றினாலும் வேறல்லர்; சொல்லும் பொருளும் போல் திகழ்பவர்கள். அபிராமி பட்டர் கூறும் இந்த உவமையை மகாகவி காளிதாசன் ''வாக்-அர்த்தா-இவ'' என்று தனது குமார சம்பவத்தின் காப்புச் செய்யுளில் அறிமுகப்படுத்தினான்.

திருஞான சம்பந்தருக்கு அருள் செய்ய வேண்டும் என்ற ஈசனின் விருப்பம் அம்பிகையின் வழியே நிறைவேறியது. அவன் அருளே அவள் என்பதால் தனித்துப் பார்க்கவில்லை.

காலையில் தந்தை அலுவலகத்துக்குப் புறப்படும் பொழுது இரண்டு குழந்தைகள் அருகில் வந்தன. மாலையில் இனிப்பு வாங்கி வரும்படி தந்தையிடம் கூறின. தந்தையும் அவ்வாறே வாங்கி வந்தார். இனிப்பைத் தன் மனைவியிடம் கொடுத்துவிட்டுக் கைகால் கழுவி வரச் சென்றார். அதற்கிடையில் தாய் இனிப்பைக் குழந்தைகளுக்குக் கொடுத்தாள். மகிழ்ச்சியுடன் இரண்டு குழந்தைகளும் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடச் சென்றன. ''இன்று எங்கப்பா இனிப்பு வாங்கித் தந்தார்'' என்றது முதல் குழந்தை. இரண்டாவது குழந்தை ''எங்கம்மா எனக்கு இனிப்புத் தந்தார்'' என்றது. இங்கு இரண்டு குழந்தைகள் கூறியதும் உண்மைதான். பெற்றோர் செயலை அவர்கள் பிரித்துப் பார்க்கவில்லை. அது போலவே ஈசன் செயல் என்றாலும் சக்தியின் செயல் என்றாலும் தவறு இல்லை. நால்வர் பெருமக்களை ஈசன் ஆண்ட விதத்தைக் கூறும் பொழுது சம்பந்தரை, ''பாலைக் கொடுத்து ஆண்டான்'' என்றுதான் குறிப்பிடுவார்கள்.

**வினா 31 : திருப்பாவையில் ''ஐயமும், பிச்சையும்'' என்று வருகிறது. இரண்டுக்கும் என்ன வேறுபாடு?**

**விளக்கம் :** வைணவ உரையாசிரியர்கள் ''புண்ணிய காலத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தில் பாகவதர்களுக்குக் கொடுப்பது ஐயம். பிரம்மசாரிகளுக்கும், சந்யாசிகளுக்கும் இடுவது பிச்சை'' என்று விளக்குகின்றனர்.

சிறப்பான திருத்தலங்கள் புண்ணிய க்ஷேத்ரம் எனப்படும். அங்கு நடைபெறும் இறைவன் திருவிழாக்கள் சிலவற்றைப் 'புண்ணிய காலம்' என்பர். கிரகண புண்ணிய காலம், தட்சிணாயண புண்ணிய காலம், உத்தராயண புண்ணிய காலம், மகாலய புண்ணிய காலம் என்றெல்லாம் போற்றப்படும் நாட்களில் பகவானின் அடியார்களுக்கு அளிப்பது ஐயம் எனப்படும்.

வித்தை கற்கும் பிரம்மச்சாரிகளும், அனைத்தையும் துறந்த சந்நியாசிகளும் தங்களுக்கென்று எதனையும் வைத்துக் கொள்ளாமல், அன்றாட உணவையும் பிறரிடம் கேட்டு வாங்கி உண்ண வேண்டும். இது அவர்களுக்கு ஆணவம் நீங்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்பட்ட ஒரு வழக்கம். அப்படி இரந்து உண்ணுதல் 'பிட்சை' என்று வடமொழியில் கூறுவர்.

துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

எனவே, துறவிகளுக்கும் 'பிட்சை' கேட்பவருக்கும் இடவேண்டியவை முறையே ஐயமும் பிச்சையும் ஆகும்.

**வினா 32 : கார்த்திகைப் பௌர்ணமி (திருக் கார்த்திகை) நாளில் திருக்கோயில்களில் முன்பு 'சொக்கர்பனை' கொளுத்துவதன் காரணம் என்ன?**

**விளக்கம் :** 'சொக்கர்' என்றால் சொக்கநாதன் என்ற சிவபெருமானைக் குறிக்கும். அவர் ஜோதி வடிவாகத் தோன்றிய நிகழ்ச்சியை நினைவு கொள்ளும் வகையில் பனை ஓலைகளைக் கூம்பு வடிவக் கோபுரம்போல் கட்டிக் கொளுத்துவார்கள். ஆதலால் 'சொக்கர் பனை' என்று பெயர் பெற்றது. பனை மரங்கள் இல்லாத ஊர்களில் தென்னை ஓலைகளைக் கொண்டு சொக்கர்பனை கட்டிக் கொளுத்துவார்கள்.

மகாபலி மன்னன் அடிக்கடி அதுபோல் கட்டிக் கொளுத்தி மகிழ்ந்ததாகக் கூறுவர். அதனை நினைவு கொள்ளும் வகையில் விஷ்ணு ஆலயங்களில் சொக்கர் பனை கொளுத்துகின்றனர். பெருமாள் கோயில்களில் சொக்கர்பனை எரியும் பொழுது ''மகாபலியோ மகாபலி!'' என்று முழக்கமிடும் வழக்கமும் உண்டு.

ஐப்பசி மாதத்தில் பெய்யும் அடைமழை ஓய்ந்தபின் கார்த்திகையில் நோய்க்கிருமிகள் உற்பத்தியாகி மார்கழியில் காலரா போன்ற கொடிய நோய்களைத் தோற்றுவிக்கும்.

கார்த்திகைத் தீபத் திருநாளில் இல்லந்தோறும் ஏற்றும் எண்ணற்ற அகல்விளக்கின் ஒளியில் அவை அழிந்து போகும். வீடு முழுவதும் விளக்குகள் ஏற்றுவதோடு தீபத்திருநாளின் மூன்றாம் நாள் மாட்டுக் கொட்டகை, குப்பைத் தொட்டி என்று எல்லா இடங்களிலும் விளக்கு ஏற்றுவார்கள். அன்று 'குப்பைக் கார்த்திகை' என்று கொண்டாடுவார்கள். கொசு முதலிய நோய் பரப்பும் கிருமிகள் உற்பத்தியாகும் இடங்களில்தான் 'குப்பைக் கார்த்திகை' தீபங்கள் ஏற்றப்படுகின்றன.

மக்கள் கூடும் திருக்கோயில்களில் பெரிய தீபங்கள் ஏற்றுவதுடன், சொக்கர் பனையும் கொளுத்துவர். இவற்றின் வெப்பத்தால் கிருமிகள் அழிகின்றன. தீபாவளி நாளிலும் திருவிழா நாட்களிலும் வாண - வெடிகள் கொளுத்துவதன் பயனும் அதுவே ஆகும்.



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 29.10.2000 அன்று புதிய கட்டிடங்கள் திறப்பு விழா, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் கல்வெட்டுத் திறப்புவிழா, திருக்கோயிலின் கட்டுமானப் பணிகளின் தொடக்க விழா, திருக்குட நீராட்டு மலர் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு த. பூவேந்தன், மதுரை இணை ஆணையர் திரு பொன் செல்வராஜ் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். அறங்காவலர் குழுத் தலைவர் திரு கே.சி. பழனிசாமி அவர்களும், அறங்காவலர்களும், திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு தி. ஜெயராமன் பி.ஏ.பிஎல்., அவர்களும் இவ்விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 29.10.2000 அன்று புதிய கட்டிடங்கள் திறப்பு விழா, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் கல்வெட்டுத் திறப்புவிழா, திருக்கோயிலின் கட்டுமானப் பணிகளின் தொடக்க விழா, திருக்குட நீராட்டு மலர் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு த. பூவேந்தன், மதுரை இணை ஆணையர் திரு பொன் செல்வராஜ் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். அறங்காவலர் குழுத் தலைவர் திரு கே.சி. பழனிசாமி அவர்களும், அறங்காவலர்களும், திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு தி. ஜெயராமன் பி.ஏ.பிஎல்., அவர்களும் இவ்விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.